பக்கங்கள்:-32

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | கார்த்திகை 25 | புதன்கிழமை | 10.12.2025 | அதிர்வு 132

## பண்டத்தரிப்பில் குளத்தில் மூழ்கி இளைஞர் சாவு!



யாழ்ப்பாணம், இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டத்தரிப்பில் உள்ள குளம் ஒன்றில் தூண்டில் போட்டு மீன் பிடித்த இளைஞர் ஒருவர் குளத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளார். 06



# பேரிடரில் இருந்து மீள போராடும் இலங்கை!

## ஜனாதிபதி அநுரகுமார கவலையுடன் தெரிவிப்பு
## உதவி வழங்கிய நாடுகளுக்கு நன்றியும் கூறினார்

**பேரழிவை ஏற்படுத்திய டித்வா சூறாவளியில் இருந்து மீள்வதற்கு இலங்கை போராடி ருகின்றது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கவலையுடன் தெரிவித்துள்ளார்.**

**சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.** 06

# அனர்த்தச் சாவு எண்ணிக்கை 639 ஆக அதிகரிப்பு

## 5 ஆயிரத்து 350 வீடுகள் முழுமையாகச் சேதம்



இலங்கையில் ஏற்பட்ட அனர்த்தப் பேரழிவுகளால் இது வரை மொத்தமாக 639 பேர் உயிரிழந்துள்ளதுடன், 203 பேர் காணாமல்போயுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்று மாலை 6 மணி வரை புதுப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனர்த்தங்களின் விளைவாக, 5 ஆயிரத்து 350 வீடுகள் முழுமையாகவும், 86 ஆயிரத்து 882 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களைத் தங்கவைப்பதற்காக 06




பேரழிவுப் புயல் நாட்டைப் புரட்டிப் போட்டு விட்டுச் சென்றுவிட்டது. உயிரிழந்தோர் மற்றும் காணாமல் போனோர் எண்ணிக்கை ஆயிரத்தைத் தொடும் அளவுக்கு இழப்பு. மேலும் பொருளாதார பாதிப்பும் சொத்துகள் இழப்பும் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு உச்சம்.

முன்னெச்சரிக்கைகள் கிடைத்தும் போதிய முன்னாயத்த மற்றும் பாதுகாப்பு அவசர நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து நீடிக்கின்றது. எதிர்க் கட்சிகள் அவற்றை அடுக்கிக் கொண்டே போகின்றன. அந்தக் குற்றச்சாட்டுகளைச் சமாளிக்க அரசு பகீரதப் பிரயத்தனம் செய்கின்றது.

இலங்கையைத் தாக்கிய டித்வா சூறாவளி குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் ஏலவே இலங்கை அதிகாரிகளுக்குத் தெரிவித்ததாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இணையதளம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் பணிப்பாளர் நாயகத்தை மேற்கோள் காட்டி, 06



# மண்ணுக்குள் புதைந்துள்ள உடல்களில் இருந்து துர்நாற்றம்

நுவரெலியா மாவட்டத்தின் கொத்மலை, இறம்பொடை, கெரண்டியெல்ல உள்ளிட்ட பகுதிகளில் மண்ணுள் புதைந்துள்ள உடல்களில் இருந்து துர்நாற்றம் வீசி வருகின்றது என்று அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்

இந்தப் பகுதிகளில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்குண்டு பலர் மண்ணுக்குள் புதையுண்டனர். அதிலிருந்து பலரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

எனினும், மீட்கப்படாத சடலங்களில் இருந்தே இந்தத் துர்நாற்றம் வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பேரிடர் என்பதால், மண்ணுக்குள் அநேகமான சடலங்கள் புதையுண்டிருக்கலாம் என்பதைச் சுகாதார அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க ஏற்றுக்கொண்டார்.

எனினும், புதையுண்டிருக்கலாம் என நம்பப்படும் உடலங்களில் இருந்து துர்நாற்றம் வீசுவதால் எவ்வித தொற்று நோய்களும் ஏற்படாது என்றும் அவர் குறிப்பிட்டார்.



# காலியில் நேற்று இரண்டு இடங்களில் ரயில்களுடன் கார்கள் மோதி விபத்து!

(க.மகாதேவன்)

காலியில் நேற்று இரு இடங்களில் ரயில்களுடன் கார் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

பியதிகம ரயில் கடவையில் கார் ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக் குள்ளாகியுள்ளது.

காலியில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த ரயிலிலேயே இந்தக் கார் மோதியுள்ளது.

இந்த விபத்தில் சாரதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வெள்ள நிவாரண உதவிகளைக் கொண்டு சென்ற காரே விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதேவேளை, ஹிக்கடுவ – நாரிகம பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவை ஒன்றைக் கடக்க முற்பட்ட நிலையில், கார் ஒன்று, ரயிலுடன் மோதி விபத்துக் குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் சாரதி உட்பட அதில் பயணம் செய்தவர்கள் காயங்களுடன் உயிர் தப்பினர்.





# பேரிடர் தயார்படுத்தலின் குறைபாடுகளை ஒப்புக்கொண்டார் ஜனாதிபதி அநுரகுமார

நாட்டின் பேரிடர் தயார்படுத்தலிலும் பதில் செயல்பாட்டிலும் இருந்து வரும் நீண்டகால குறைபாடுகளை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஏற்றுக்கொண்டுள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இந்த குறைப்பாடுகளை ஏற்றுக்கொண்டுள்ளார்.

எனினும், உயிரிழப்புகள், கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்குதல், உட்கட்டமைப்பு சேதம் உள்ளிட்ட கடுமையான பாதிப்புகளுக்கு மத்தியிலும் இலங்கை அரசாங்கம் உடனடியாகவே செயற்பட்டதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இருந்தாலும், நிலப்பயன்பாட்டு ஒழுங்குவிதிகள், உள்ளூர் தயாரிப்புகள், மீட்பு உதவிகளின் வேகம் போன்ற துறைகளில் பலவீனங்கள் வெளிப்பட்டன என்பதை அவர் ஒப்புக்கொண்டார்.

அரசாங்கம், தற்போது பேரிடர் முகாமைத்துவ அமைப்பை முழுமையாக மறுசீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இதற்காக, அதிக அதிகாரமும் வளங்களும் கொண்ட தேசிய பேரிடர் முகாமைத்துவ அதிகாரசபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், முன்கூட்டிய கணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை அமைப்புகளை, குறிப்பாக காலநிலை கணிப்பு மற்றும் சமூக எச்சரிக்கை முறைகளை மேம்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் ரேடார் வசதிகளை மேம்படுத்தல், ஆபத்தான பகுதிகளில் மீட்பு உபகரணங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை முன்கூட்டியே கையிருப்பில் வைத்திருத்தல், மலைப்பாங்கான பிரதேசங்களில் மண்சரிவு அபாய வரைபடங்களைப் புதுப்பித்தல் போன்ற கட்டமைப்பு சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நீண்டகால நிலைத்தன்மையைக் கட்டியெழுப்ப அரசாங்கம் முழு உறுதியுடன் செயல்படும் என்றும் இலங்கை மேலும் சிறப்பாக மீள கட்டியெழுப்படும் எனவும் ஜனாதிபதி இந்திய ஊடகத்திடம் குறிப்பிட்டுள்ளார்.

# ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு 1.8 மில்லியன் யூரோ அவசர உதவி

இலங்கைக்கு அனர்த்த நிவாரண உதவியாக ஐரோப்பிய ஒன்றியம் 1.8 மில்லியன் யூரோ (சுமார் 70 கோடி ரூபா) அவசர மனிதாபிமான உதவியை விடுவித்துள்ளது.

இந்த நிதி மிகவும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு அத்தியாவசிய நிவாரண உதவிகளை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும் என ஐரோப்பிய ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்த 1.8 மில்லியன் யூரோ நிதியிலிருந்து, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறைச் சங்கங்களின் கூட்டமைப்பின் அனர்த்தப் பதிலளிப்பு அவசர நிதியத்தின் மூலம் 500,000 யூரோ அனுப்பப்பட்டுள்ளது.



“அத்தியாவசிய நிவாரணம், பாதுகாப்பான தங்குமிடம் மற்றும் அவசர உதவிகளை வழங்குவதன் மூலம், நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுடன் நிற்கிறோம்,” என்று அனர்த்தத் தயார் நிலை, நெருக்கடி முகாமைத்துவம் மற்றும் சமத்துவத்திற்கான ஆணையாளர் ஹட்ஜா லஹ்பிப் கூறினார்.

ஐரோப்பிய ஒன்றியம் அதன் சிவில் பாதுகாப்புப் பொறிமுறை மூலம் பொருள்களின் அடிப்படையிலான உதவிகளையும் இலங்கைக்கு வழங்குகிறது.

இதில், ஜேர்மனி 4,600 தங்குமிடப் பொருள்களையும், பிரான்ஸ் 3,400 தங்குமிடப் பொருள்களையும் வழங்கியுள்ளன.

அத்துடன், இத்தாலி பொறியியல் நிபுணர்கள் குழுவை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.



# நீர் வழங்கல் சபைக்கு 5 பில்லியன் ரூபா நட்டம்

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களால் நீர் வழங்கல் சபைக்கு 05 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் வைத்தியர் சுசில் ரணசிங்க இதனை தெரிவித்தார்.

சேதமடைந்த நீர் விநியோகக் கட்டமைப்புகளில் 90 வீதமானவை வழமைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுசில் ரணசிங்க குறிப்பிட்டார்.



# ஜனாதிபதியின் செயலாளர் பிரான்ஸ் தூதுவருடன் சந்திப்பு

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ரெமி லேம்பெர்ட் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்திற்கு பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் நிறுவனம் ஆதரவளிக்கும் என்றும் இதற்காக எதிர்காலத்தில் நிபுணர்கள் குழுவை நாட்டிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதியின் செயலாளரிடம் பிரான்ஸ் தூதுவர் உறுதியளித்தார்.

பிரான்ஸ் தூதரகத்தின் துணைத் தலைவர் மத்திஜ ஜான் இந்நிகழ்வில் பங்கேற்றார்.




# தென் கொரியாவிலுள்ள இலங்கையர்கள் 38.43 மில்லியன் நன்கொடை வழங்கினர்

தென் கொரியாவில் தொழில்புரியும் இலங்கையர்களால் திரட்டப்பட்ட 38.43 மில்லியன் ரூபா பெறுமதியான நிதி, இலங்கையில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு ஆதரவளிப்பதற்காக நேற்று பிரதமர் ஹறிணி அமரசூரியவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிதித் திரட்டல் முயற்சியைத் தென் கொரியாவின் ஜியோன்ஜு நகரில் உள்ள ஒரு தொழிற்சாலையில் மேற்பார்வையாளராகப் பணியாற்றும் இலங்கையர் ஒருவரே வழிநடத்தியுள்ளார் என ஆங்கில ஊடகமொன்று குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில் தென் கொரியாவில் உள்ள இலங்கை வெளிநாட்டு ஊழியர்கள் மற்றும் வர்த்தக உரிமையாளர்கள், தான் தனிப்பட்ட முறையில் விடுத்த உதவிக்கான கோரிக்கையை நம்பி அளித்த நன்கொடைகள் மூலம் வெறும் 48 மணி நேரத்தில் இந்த நிதி திரட்டப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

# அனர்த்த நிவாரணப் பணிகளில் ஒருங்கிணைப்புக் குறைபாடுகள்

## நாமல் குற்றச்சாட்டு



சமீபத்திய அனர்த்தத்தின் போது பொதுமக்கள் எதிர்கொண்ட சிரமங்கள், அரசாங்க நிறுவனங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்புக் குறைபாட்டால் மேலும் மோசமடைந்துள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

பேராதனையில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவ கிராம மட்ட அதிகாரிகள் சிறப்பாக செயற்பட்ட போதிலும், அரசாங்க நிறுவனங்களுக்கு இடையேயான தொடர்பாடலிலுள்ள இடைவெளிகள் மேலும் சிரமங்களை ஏற்படுத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கல்வி அமைச்சு டிசம்பர் 16 ஆம் திகதி பாடசாலைகளை மீண்டும் திறக்கத் தயாராகி வரும் நிலையில், இடம்பெயர்ந்த பல குடும்பங்கள் இன்னும் பாடசாலைக் கட்டடங்களிலேயே தங்கியுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

அதே நேரத்தில், தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவனம் பாதுகாப்பற்ற வீடுகளில் இருந்து மக்களை வெளியேறுமாறு அறிவுறுத்துகிறது.

ஆனால் இடம்பெயர்ந்த மக்கள் பாடசாலைகளை காலி செய்யுமாறு கேட்கப்படுகிறார்கள், இந்த நிலைமை முரண்பாடானது மற்றும் மோசமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது என்று நாமல் ராஜபக்ச குறிப்பிட்டார்.

பொது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அரசாங்கம் நன்கு புரிந்துகொண்டு பதிலளிக்க வசதியாக, நாடாளுமன்றத்தை விரைவாகக் கூட்ட வேண்டும் என்றும் நாமல் ராஜபக்ஷ அழைப்பு விடுத்தார்.

அத்துடன், அனர்த்தம் தொடர்பான முன்கூட்டிய எச்சரிக்கைகள் மற்றும் தகவல்கள் பொதுமக்களுக்கு எவ்வாறு தெரிவிக்கப்பட்டன என்பதை விசாரிப்பதற்கென ஒரு விசேட தேர்வுக் குழுவை அமைக்குமாறும் அவர் கோரினார்.

மேலும், அரசாங்கம் பல வாக்குறுதிகளை அளித்துள்ளது, அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். ஜனாதிபதி தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறாரா என்பதைக் கவனித்து வருகிறோம், தேவைப்பட்டால் ஒருங்கிணைப்புக்கு உதவ நாங்கள் தயாராக உள்ளோம் என்று நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# பேரிடரைப் பயன்படுத்தி அநுர அரசைக் கவிழ்க்க எதிரணி சதி செய்யாது!

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. உத்தரவாதம்



அனர்த்தப் பேரழிவுச் சம்பவத்தைப் பயன்படுத்தி அநுர அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எவ்வித சூழ்ச்சிகளிலும் ஈடுபடாது என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்த நாட்டை ஐந்து வருடங்களுக்கு ஆள வேண்டும். தமது பொறுப்பை நிறைவேற்றாமல் அவர்கள் தப்பிச் செல்ல முடியாது.

நாம் இந்த ஆட்சியைக் கவிழ்க்கச் சூழ்ச்சி செய்யவில்லை. அதற்கான உத்தரவாதத்தை நாம் வழங்குகின்றோம்.

கடந்த ஒரு வருடமாக நாம் எவ்வித பேரணியையும் நடத்தவில்லை. நாசகார செயலிலும் ஈடபடவில்லை. ஆனால், தேசிய மக்கள் சக்தி எதிரணியில் இருந்திருந்தால் இந்த அனர்த்த நேரம் என்ன நடந்திருக்கும்?" - என்றும் முஜிபுர் ரஹ்மான் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நவம்பர் 20ஆம் திகதி சூறாவளி ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு குறித்து, இந்திய வானிலை ஆய்வு மையம் கடந்த நவம்பர் 13ஆம் திகதியே எச்சரிக்கை விடுத்ததாக அந்த இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி, நவம்பர் 26 ஆம் திகதி வரை டித்வா சூறாவளியால் காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதைக் குறிக்கும் வானிலை அறிக்கைகள் தொடர்பான அனைத்து தகவல்களும் வழக்கம் போல் இலங்கையுடன் பரிமாறிக் கொள்ளப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, டொச்சவெலா ஊடக அமைப்பும் இலங்கையைப் பாதித்த பேரிடர் குறித்து ஓர் அறிக்கையை வெளியிட்டு, நாட்டைப் பாதித்த சூறாவளி அரசாங்கத்தின் தோல்விகளை வெளிப்படுத்துகிறது என்று குறிப்பிட்டிருந்தது.

இந்நிலையில், சர்வதேச ஊடக அமைப்பான 'ஸ்கை நியூஸ்', நாட்டில் ஏற்பட்டுள்ள பேரிடர் நிலைமை குறித்து செய்தி வெளியிட்டுள்ளது. சூறாவளி குறித்து தங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படவில்லை எனவும், அல்லது பாதிப்புக்குள்ளான பகுதியிலிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தல்கள் எதுவும் வழங்கப்படவில்லை எனவும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர் என ஸ்கை நியூஸ் சுட்டிக்காட்டியது.

ஆனால் எதிர்க்கட்சிகள் தரப்பில் முன்வைக்கப்படும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஆதாரம் அற்றவை என்று வெளியுறவு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் கூறியிருக்கிறார்.

நாட்டை பாதிக்கும் கடுமையான முதல் எச்சரிக்கை நவம்பர் 25ஆம் திகதிதான் அரசாங்கத்திற்கு வந்தது என்றார் அவர்.

"நவம்பர் 25 ஆம் திகதி வரை வானிலை ஆய்வுத் துறை சூறாவளி நிலைமைகளைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. அதற்கு முன்பு அவர்கள் கணித்தது கனமழை பற்றியதே. ஆனால் அதிலும் அந்த அறிக்கைகள் ஊசலாடிக் கொண்டிருந்தன. புயலை எதிர்பார்ப்பது பற்றிய உறுதியான படத்தைக் கொடுக்கவில்லை. சூறாவளி எச்சரிக்கை வெளியிடப்பட்டதும், அரசாங்கம் உடனடியாகச் செயல்பட்டது," என்று அமைச்சர் விஜித்த ஹேரத் கூறினார்.

கல்வி அமைச்சு, கடற்றொழில் அமைச்சு மற்றும் நீர்ப்பாசனத் துறை அதிகாரிகளுடன் நவம்பர் 18 முதல் வானிலை ஆய்வுத் துறை பல இணைய வழிக் கூட்டங்களை நடத்திக் கொண்டிருந்தது. 150 மி.மீ.க்கும் அதிகமான கனமழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படும் மழைப்பொழிவு குறித்தே அந்தக் கூட்டங்களில் விளக்கம் அளிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

ஆனால் மழைப்பொழிவு அன்றாட வாழ்க்கையைச் சீர்குலைக்கும் அளவுக்கு அதிகமாக இருக்கும் என்று அப்போது எச்சரிக்கப்படவில்லை. அந்த நேரத்தில் நடந்து கொண்டிருந்த உயர்தரத் தேர்வு திகதிகளை மாற்ற எந்தத் திட்டமும் தேவையில்லை என்று கல்வி அமைச்சிடம் கூறப்பட்டது. அதே நேரத்தில் எந்த முக்கிய நீர்த்தேக்கங்களிலிருந்தும் தண்ணீரைத் திறக்க வேண்டிய அவசியமில்லை என்றும், அவற்றில் நீர் மட்டம் குறைவாக இருந்ததால், மழை பெய்யவில்லை என்றால், பின்னர் விவசாயிகளுக்கு தண்ணீரைத் திறக்க முடியாது என்றும் நீர்ப்பாசனத் துறையிடம் கூறப்பட்டது. அதற்கு முந்திய வாரத் தொடக்கத்தில் முக்கிய நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் சுமார் 42 சதவீதம் இருந்ததாகவும், எனவே அவற்றை காலி செய்ய வேண்டிய அவசியமில்லை என்றும் அமைச்சரவைக்கு தெரிவிக்கப்பட்டது.

கடற்றொழில் துறையில், கனமழை எச்சரிக்கைகள் முன்னறிவிக்கப்பட்டதால், மீனவர்கள் எச்சரிக்கைகளுக்கு செவிசாய்த்தனர். அதனால் அவர்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று சுட்டப்பட்டது.

புயல் முன்னெச்சரிக்கை தொடர்பில் அரசு தவறிழைக்காமல் செயற்பட்டதா என்பதை முடிவு செய்வதற்கு ஒரு தனி ஆணை குழு அமைத்து விசாரித்தால் தான் நிலைமை தெளிவாகும் போல...!

## பேரிடரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

"வரலாற்றுச் சிறப்புமிக்க கடன் மறுசீரமைப்பை நாங்கள் இப்போதுதான் முடித்துள்ளோம். தற்போது டித்வா சூறாவளியால் கட்டுப்பாட்டை மீறிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளோம்.

ஆபரேஷன் சாகர் பந்து மூலம் இந்தியா வேகமாகப் பதிலளித்தது. அவர்கள் விமானங்கள், ஹெலிகள், விமானம் தாங்கிக் கப்பல் உள்ளிட்ட கடற்படைக் கப்பல்கள் மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படை வீரர்களை இலங்கைக்கு அனுப்பிவைத்தார்கள்.

அதேபோல் பல வெளிநாடுகளும் விலைமதிப்பற்ற ஆதரவுகளை - உதவிகளை எமக்கு வழங்கின.

மேற்படி நாடுகளுக்கு இலங்கை அரசு சார்பாக - பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இலங்கையைப் பொறுத்தவரை, வெற்றி என்பது சந்தை அணுகல் மற்றும் புதுப்பிக்கப்பட்ட முதலீட்டு ஓட்டங்களைக் குறிக்கின்றது.

இலங்கையை ஒரு நிலையான மற்றும் நம்பகமான கூட்டாளியாகவும், இந்தியப் பெருங்கடல் மையமாகவும் நிலைநிறுத்துவதற்காக நாங்கள் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் நிர்வாகத்துடன் இணைந்து செயற்படுகின்றோம்.

வெளிநாட்டு இராணுவத் தளங்கள் எதுவும் இலங்கைக்குள் அனுமதிக்கப்படுவதில்லை என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கின்றோம்.

கொழும்புத் துறைமுக நகரம் முதன்மையாக ஒரு வணிக வளர்ச்சியாகும். இது வேலைவாய்ப்புகளை உருவாக்கும், முதலீட்டை ஈர்க்கும் மற்றும் வருவாயை ஈட்டும் நோக்கத்தில் முன்னெடுக்கப்படுகின்றது." - என்றார்.

## பண்டத்தரிப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கீரிமலை வீதி, விளான் பகுதியைச் சேர்ந்த வாமதேவன் கோகிலதேவ் (வயது 33) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மூன்று இளைஞர்கள் நேற்றுமுன்தினம் மாலை குறித்த குளத்தில் தூண்டில் போட்டு மீன்பிடிக்கச் சென்றனர். இதன்போது மேற்படி இளைஞர் தூண்டிலைக் குளத்தில் வீசிய வேளை தூண்டில் முழுவதுமாக குளத்தில் விழுந்தது.

இதன்போது அந்த இளைஞர் தூண்டிலை எடுப்பதற்குக் குளத்தில் இறங்கிய வேளை நீரில் மூழ்கினார். அவரைக் காப்பாற்றுவதற்கு அங்கு நின்றவர்கள் முயற்சித்தும் அது பலனளிக்கவில்லை.

இந்நிலையில் நேற்றுக் காலை கே.கே.எஸ். கடற்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது மேற்படி இளைஞர் சடலமாக மீட்கப்பட்டார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காகச்சடலம்யாழ்ப்பாணம்போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

## அனர்த்தச் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடு முழுவதும் 878 பாதுகாப்பு மையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

இந்த மையங்களில் மொத்தமாக 27 ஆயிரத்து 145 குடும்பங்களைச் சேர்ந்த 86 ஆயிரத்து 40 பேர் தற்போது தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கண்டி மாவட்டத்தில் அதிகபட்சமாக 234 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. அங்கு 1,568 வீடுகள் முழுமையாகவும், 14 ஆயிரத்து 111 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன.

அத்துடன், கண்டி மாவட்டத்தில் உள்ள பாதுகாப்பு மையங்களில் 27 ஆயிரத்து 227 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அதிக உயிரிழப்புகள் பதிவான பிற மாவட்டங்களாகப் பதுளை (90 பேர்), நுவரெலியா (89 பேர்), குருநாகல் (61 பேர்) மற்றும் புத்தளம் (37 பேர்) ஆகியவை உள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

# அப்பாவி மக்களைத் தூண்டிவிட்டு அனர்த்தத்தில் அரசியல் செய்யாதீர்!

## ஆளுந்தரப்பினருக்கு பிரதேச சபைத் தவிசாளர் சாட்டை



அப்பாவி மக்களைத் தூண்டி, அவர்களின் சிந்தனையை மாற்றி, அனர்த்தத்தில் அரசியல் செய்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தியிடம் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் கந்தையா ஜெசிதன் கோரிக்கை விடுத்தார்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை அலுவலகத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே தவிசாளர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது பிரதேசத்தில் இருக்கக்கூடிய கல்லுண்டாய் குடியிருப்புஒ பகுதி மக்கள் கடந்த ஐந்தாம் திகதி அந்தப் பகுதிக்கு தண்ணீர் கொடுக்கச் சென்ற வாகனத்தை இடைமறித்துப் போராட்டத்தை நடத்தி இருந்தனர்.

பிரதேச சபை நீண்ட காலமாக முழுமையாக தண்ணீர் வழங்குவதில்லை எனவும் அதனால் தாம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்து போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

2019ஆம் ஆண்டு தற்போது இருக்கக்கூடிய ஆளுநர், யாழ்ப்பாண மாவட்ட செயலாளராக இருந்த காலத்தில்தான் அந்தக் குடியிருப்பு கல்லுண்டாயில் அமைக்கப்பட்டது. அந்த நாள் முதல் அந்த குடியிருப்புக்கான தண்ணீர் சேவையை பிரதேச செயலகம் வழங்கியிருந்தது. ஆனால் பிரதேச செயலகம் அதனை தொடர்ச்சியாக செய்ய முடியாத நிலை ஏற்பட்டதனால் எம்மிடம் கேட்ட தற்கமைய ஐந்து வருடங்களாக இதனை நாம் செய்கிறோம்.

தண்ணீர் இல்லாமல் அந்த குடியிருப்பில் யாரும் மரணித்ததாகவோ ஏதும் நடந்ததாகவோ இதுவரை எந்தத் தகவலும் பதிவில் இல்லை. பிரதேச சபை தன்னுடைய கடமையை மிகச் சரியாக செய்து வருகிறது. பிரதேச சபையின் வளங்களை பொறுத்தவரையில் சில தடங்கல்களும் இடையூறுகளும் ஏற்படும் நேரங்களில் தண்ணீர் போகின்ற நேரங்கள் தவறினாலும் அந்தத் தண்ணீர் ஏதோவொரு விதத்தில் சென்றடையும்.

கல்லுண்டாயில் மழை அதிகம் பெய்யும் நேரத்தில் பெரிய பவுசர்களை அங்கு கொண்டு செல்ல முடியாது. அது புதைந்து விடும். பிறகு அதனை வெளியில் கொண்டுவர முடியாது. அந்த காலங்களில் சிறிய பவுசர்களை பயன்படுத்துகிறோம்.

வெள்ளம் அதிகரித்தால் எந்த பவுசரையும் அதற்குள் கொண்டு செல்ல முடியாது. இந்த நிலைமையை கருத்திற்கொண்டு தொடர்ச்சியாக தண்ணீரை வழங்கி வந்தோம்.

ஆனால் தற்போது பேரிடர் ஏற்பட்ட பின்னர் கடந்த ஐந்தாம் திகதி ஒரு போராட்டத்தை செய்திருக்கிறார்கள்.

கடந்த 24ஆம் திகதியே கடைசியாக தண்ணீர் வந்தது என்றும் இதுவரைக்கும் தண்ணீர் வரவில்லை என்றும் பிரதேச சபையின் மீது குற்றஞ்சாட்டி இருந்தார்கள்.

நாங்கள் தண்ணீர் அடிக்கும் போது பிரதேச சபையினால் ஒரு பதிவேடு பயன்படுத்தப்படுவது வழமை. அதன் மூலம் தண்ணீர் அடிக்கப்படுவது குறிக்கப்படும். அந்த ஏட்டினுடைய பதிவின்படி 27ஆம் திகதி எங்கள் பிரதேச சபை பவுசர் அந்த குடியிருப்புக்கு தண்ணீர் கொண்டு போய் வழங்கி இருக்கிறது.

28ஆம் திகதி மழை மெல்ல மெல்ல ஆரம்பித்துள்ளது. 29 ஆம் திகதி அந்த குடியிருப்பில் இருந்த மக்கள் அதற்கு அருகில் இருந்த வை.எம்.சி.ஏ. கட்டடம் நலன்புரி நிலையமாக மாற்றப்பட்டு அதில் குடியமர்த்தப்பட்டார்கள் என்ற பிரதேச செயலாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய அந்த வை.எம்.சி.ஏ. கட்டடத் தொகுதிக்கு தண்ணீர் விநியோகம் செய்தோம்.

வழமைக்கு மாறாக அனர்த்த காலத்தில் கட்டுடை, ஆனைக்கோட்டை, சுதுமலை வடக்கு, சாவல்கட்டு, உயரப்புலம், சில்லாலை போன்ற பகுதிகளில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட நலன்புரி நிலையங்களில் தண்ணீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டு புதிதாக நீர்விநியோகம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது.

அதையும் தாண்டி பல நன்னீர் குடியிருப்பு கிணறுகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்ததால் அந்தந்த இடங்களில் வாழும் மக்களுக்கும் தண்ணீர் தாங்கிகளை வைத்து தண்ணீர் வழங்கியிருந்தோம். கிட்டத்தட்ட பத்து தண்ணீர் தாங்கிகளை அனர்த்தத்துக்காக புதிதாக வைத்து சேவையில் ஈடுபட்டோம்.

அனர்த்த காலத்தில் இவ்வாறான நெருக்கடி நிலையால் 27 ஆம் திகதிக்குப் பிறகு கல்லுண்டாய் பகுதிக்கு உள்ளே சென்று தண்ணீர் விநியோகிக்கப்படவில்லை. அங்குள்ள மக்கள் அருகில் உள்ள நலன்புரி நிலையமாக மாற்றப்பட்ட வை.எம்.சி.ஏ. கட்டடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டதால் அங்கு சென்று விநியோகிக்கவில்லை.

கல்லுண்டாய் மக்கள் குடியிருப்பில் இருந்தாலும் அங்கு வாகனங்களைக் கொண்டு சென்று விநியோகிக்க முடியாது. வாகனங்கள் புதைந்தால் வேறு எங்குமே தண்ணீர் விநியோகம் செய்ய முடியாது.

தற்பொழுது அந்த மக்கள் இவ்வாறு குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரை அவர்களாக இவ்வாறு போராட்டத்தைத் தொடங்கிச் செய்யவில்லை. யாரோ ஓர் அரசியல் சார்ந்தவர்கள் இதனைச் செய்திருக்கிறார்கள் என்றே எண்ணுகிறோம்.

ஏனென்றால் அன்றையப் போராட்டத்திற்கு நாங்கள் போனபோது அங்கிருந்த மக்களை விட தற்போது இருக்கக்கூடிய அரசாங்கக் கட்சியினுடைய அமைப்பாளரும் அவர்கள் சார்ந்த தொண்டர்களுமே அதிகமாக இருந்தார்கள். அவர்களே அங்கு காணொளிகளை எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

நான் அங்கு சென்று எமது நிலைப்பாட்டை கூறி வழமையைப் போல தண்ணீர் வரும் எனத் தெரிவித்திருந்தோம். நாம் சொன்ன காரணத்தை கூட கேட்காமல் அரசியல் காரணத்திற்காக எம்முடன் முரண்பட்டார்கள்.

அதே அரசாங்கக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரின் முகநூலிலும் அரசாங்க கட்சி அமைப்பாளர்களின் முகநூலிலும் ஆதரவாளர்களின் முகநூலிலும்தான் இந்த தகவல் பரப்பப்பட்டது.

அப்பாவி மக்களை தூண்டி, அவர்களின் சிந்தனையை மாற்றி, அனர்த்தத்தில் அரசியல் செய்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

கல்லுண்டாய் குடியிருப்பில் எட்டாம் மாதத்தில் இருந்து இன்று வரைக்கும் ஒரு லட்சத்து 37 ஆயிரம் ரூபாய் தண்ணீருக்கான கட்டணத்தை செலுத்த வேண்டும். ஆனாலும் குடிதண்ணீர் அத்தியாவசியமான ஒன்று என்ற வகையில் அவர்களது வறுமையை கருத்தில் கொண்டு அவர்களுக்கு நிறுத்தாமல் குடிதண்ணீரை வழங்கிக் கொண்டு வருகிறோம்.

அதனை நிறுத்தினால் அது மனிதாபிமானமற்ற செயல். அதற்காக காசு கட்டினார்களோ கட்ட வில்லையோ நாங்கள் குடிதண்ணீரை வழங்கி வருகிறோம்.

அன்றைய போராட்டம் முடிவடைந்த பின்னர் அந்த அரச கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அந்த மக்களுக்கு நன்றி தெரிவித்து கேக் வெட்டி கொண்டாடியுள்ளார். அது தொடர்பான படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது. அது நமக்கொ பிரச்சினை இல்லை. ஆனால் நாளாந்தம் பிரச்சினையைக் கொண்டுள்ள மக்களைத் தொடர்ச்சியாக கவனிக்கப் போவது எங்கள் பிரதேச சபைதான். அதனை நாம் செய்து கொண்டுதான் இருக்கிறோம்.

ஆளுநரிடம்ஒருதாழ்மையானவேண்டுகோளை முன்வைக்கிறோம்.

அந்த குடியிருப்புக்கு பக்கத்தில்தான் நீர் வழங்கல் சபை உள்ளது. அதன் மூலமாகக் கல்லுண்டாய் பகுதிக்கு குடி தண்ணீரை வழங்கினால் இந்தப் பிரச்சினை விரைவில் தீர்ந்து விடும் – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மனித உரிமைகள்

இன்று சர்வதேச மனித உரிமைகள் தினம்.

இனம், மொழி, பாலினம், மதம் போன்றவற்றின் அடிப்படையில் பாகுபடுத்தப்படாமல் அனைவருக்கும் அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும், நீதியும் கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்ற நாள் இது.

நீதி மற்றும் சமத்துவத்தைப் பற்றி சிந்திக்கவும், உலகளாவிய ரீதியில் அவற்றை நிலை நிறுத்துவது குறித்து கவனத்தில் எடுத்து செயற்படவும் சரவதேச மக்களைத் தூண்டி வழிப்படுத்தும் நோக்கமும் இந்த நாளின் அனுஷ்டிப்புக்குள் அடங்கும்.

ஐக்கிய நாடுகள் சபை 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் திகதி உலக மனித உரிமைப் பிரகடனத்தை ஏற்றுக்கொண்டது. அதனால்தான் அந்த டிசம்பர் 10 ஆம் திகதி உலக மனித உரிமைகள் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

அனைத்து மனிதர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் அனைவருக்கும் சமத்துவம், கௌரவத்தை உறுதி செய்தல் என்பன இந்த சர்வதேச நாளின் பிரகடனத்தின் நோக்கமாக உள்ளது.

சர்வதேச ரீதியில் ஒவ்வொரு மனித ஜீவனுக்கும் உள்ள அடிப்படை மனித உரிமை என்பது கருத்துச் சுதந்திரம், சட்டத்தின் முன் சமத்துவம், கல்வி, சுகாதாரம், அமைதியான வாழ்வியல் போன்ற உரிமைகளை உள்ளடங்கியதாகும்.

இந்த நாள் மனித உரிமைகளை வெறும் பேச்சுப் பொருளாகக் கருதாமல், அவற்றின் நடைமுறைச் செயல்பாடுகளை உறுதி செய்வது குறித்துச் சிந்திக்கத் தூண்டுகின்றது. உலகளாவிய ரீதியில் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும், அவற்றின் முன்னேற்றத்தைப் பற்றி விவாதிக்கவும் ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம் என்பது, ஒவ்வொரு மனிதனினதும் உரிமைகளைப் பற்றிய ஓர் அடிப்படை ஆவணமாகும். இது ஒரு முன்னுரை மற்றும் 30 சட்டப் பிரிவுகளைக் கொண்டது. இவை ஒவ்வொரு நபரின் தனிப்பட்ட அரசியல், சமூக மற்றும் பொருளாதார உரிமைகளை அங்கீகரிக்கின்றன. இந்த ஆவணம் ஐந்நூறுக்கும் மேற்பட்ட மொழிகளில் கிடைக்கிறது. மேலும், இது உலகிலேயே அதிகம் மொழி பெயர்க்கப்பட்ட ஆவணம் என்ற பெருமையையும் கொண்டுள்ளது.

சமத்துவம், சமாதானம், சுதந்திரம், நம்பிக்கை, செழுமை, நீதி போன்ற உன்னதமான விடயங்களை மையமாகக் கொண்டது அனைத்துலக மனித உரிமைகள் தினமும் அதையொட்டிய பிரகடனமும். ஆனால் இவை அனைத்துமே மறுக்கப்பட்டு, பல்லாயிரக்கணக்கான உயிர்களை இழந்து, வார்த்தைகளால் சொல்ல முடியாத துன்பங்களை அனுபவித்து, வாழ்வோ சாவோ என்று அன்றாட வாழ்விற்கு அல்லலுறும் மக்களுக்கு அகில உலக சமூகம் நீதி வழங்கும் வரை, பூமிப் பந்தில் நீதியும், அமைதியும், சமாதானமும், மனித நாகரிக வாழ்வியலும் வெகுதூரத்தில் காணப்படும் கானல் நீர்தான்.



# பதுளையில் நீர்ப்பாசன அமைப்புகளை சீரமைப்பதற்கு திரண்ட தன்னார்வலர்கள்

டித்வா சூறாவளியினால் சேதமடைந்த நீர்ப்பாசன அமைப்புகளைச் சீரமைக்கும் 2 வார வேலைத்திட்டம் நேற்று பதுளை மாவட்டத்தில் ஆரம்பமானது.

வரவிருக்கும் மஹா போக பயிர்ச் செய்கை காலத்திற்கு முன்னதாக நீர் முகாமைத்துவ வலையமைப்புகளை மீட்டெடுப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தகவல்களின்படி, சூறாவளியால் ஏற்பட்ட பலத்த வெள்ளம் மற்றும் மண்சரிவுகளைத் தொடர்ந்து, மாவட்டத்தின் 1,020 நீர்ப்பாசன அமைப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதில் குளங்கள், கால்வாய்கள், கரைகள் மற்றும் அணைக்கட்டுகள் ஆகியவை அடங்கும்.

இந்தச் சீரமைப்பு முயற்சி நேற்று முதல் டிசம்பர் 23 ஆம் திகதி வரை இடம்பெறும்.

இந்தச் சீரமைப்புப் பணிகள் ஒரு கூட்டுத் தன்னார்வ செயற்றிட்டமாக முன்னெடுக்கப்படுகின்றது.

இலங்கை இராணுவம், இலங்கை விமானப்படை, விசேட அதிரடிப்படை, சிவில் பாதுகாப்புத் திணைக்களம், பதுளையில் உள்ள விவசாய அமைப்புகள், மாத்தறை மற்றும் மொனராகலை மாவட்டங்களைச் சேர்ந்த தன்னார்வலர்கள் ஆகியோரை உள்ளடக்கிய கூட்டு தன்னார்வ நடவடிக்கையாக இந்த பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

அத்துடன், இலங்கை செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளும் இதில் இணைந்துள்ளனர்.












# உதயசூரியன் சனசமூக நிலையத்தின் மரக் கன்றுகள் நடும் பசுமைத் திட்டம்

காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூக நிலையத்தின் பசுமைத் திட்டத்தின் கீழ் 1000 மரக் கன்றுகள் நடும் இரண்டாம் கட்டம், ரோக்கியோ சிமெண் நிறுவனத்தினருடன் இணைந்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பசுமைத் திட்டத்தின் முதற்கட்டம் கடந்த நவம்பர் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 500 மரக்கன்றுகள் நாடும் திட்டம் கிராம மக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டது.

இரண்டாம் கட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று காலை உதயசூரியன் சன சமூக நிலையத்தின் தலைவர் பிரபாகரன் தலைமையில் ஆரம்பமானது.

இயற்கை ஆர்வலரான சசிகரனால் ரோக்கியோ சிமெண்ட் நிறுவனத்துடன் இணைந்து திருகோணமலையில் இருந்து 1000 மரக்கன்றுகள் பெற்றுத் தரப்பட்டன.

உதயசூரியன் சனசமூக நிலையத்தின் முன் ஆரம்பமான இந்த பசுமைத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் நிகழ்வில் ரோக்கியோ சிமெண் நிறுவனத்தின் உயர் அதிகாரி எஸ். சிவகரன் கலந்து கொண்டு மரக்கன்றுகளை உத்தியோக பூர்வமாக நிர்வாகத்தினரிடம் கையளித்து மரக்கன்றுகளையும் நாட்டி வைத்தார்.

இந்த நிகழ்வில் கிராக மக்களும் கலந்து கொண்டு மரக் கன்றுகளை நாட்டி வைத்தனர்.











# அமரர் யூட்மெரின் நினைவுக் கிண்ணம் கட்டைக்காடு சென்மேரிஸ் அணி வசம்

வடமராட்சி கிழக்கு உதை பந்தாட்ட நடுவர் சங்கம் நடாத்திய அமரர்.யூட்மெரின் நினைவுக் கிண்ண உதைபந்தாட்ட போட்டியின் இறுதி போட்டி நேற்று இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கு உதைபந்தாட்ட நடுவர் சங்க தலைவர் மு.நகுலேஸ்வரன் தலைமையில் பிற்பகல் 03.00 மணியளவில் உடுத்துறை செந்தமிழ் மைதானத்தில் போட்டி ஆரம்பமானது.

மங்கல விளக்கேற்றப்பட்டு அமரர். யூட்மெரின் திருவுருவப்படத்திற்கு அவரது தாயார், சகோதரன் மற்றும் உறவினர்களால் மலர் மாலை அணிவிக்கப்பட்டு விருந்தினர்கள், வீரர்கள் மற்றும் இரசிகர்களால் மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இறுதி ஆட்டத்தில் கட்டைக்காடு சென்மேரிசை எதிர்த்து வத்திராயன் உதயசூரியன் அணி மோதியிருந்தது

விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தின் இறுதியில் கட்டைக்காடு சென்மேரிஸ் 02-0 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்று அமரர் யூட்மெரின் நினைவுக் கிண்ணத்தை தனதாக்கி கொண்டது.

சென்மேரிஸ் அணி சார்பாக இரண்டு கோல்கள் செலுத்திய அணியோவியன் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டதுடன், வெற்றி பெற்ற சென்மேரிஸ் அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் பணப்பரிசும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த இறுதி போட்டியில் பருத்தித்துறை பிரதேசபை தவிசாளர் யுகதீஸ் பிரதம விருந்தினராகவும், கௌரவ விருந்தினராக மருதங்கேணி பொலிஸ் அதிகாரி, உடுத்துறை கிராம அலுவலர் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினர் சசிகாந் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.











# த.வெ.க. அரசியல் பயணத்தை தி.மு.க. முடக்க முயல்கின்றது

## அது அணுவளவும் நடக்காது என்கிறார் விஜய்





“அதிகாரத்தை வைத்துக்கொண்டு, சட்டத்தை வளைத்து, சூழ்ச்சிகள் உட்பட என்னென்னவோ திட்டம் போட்டு நம் அரசியல் பயணத்தை, மக்கள் சந்திப்பை, பிரச்சார முன்னெடுப்புகளை தி.மு.க. அரசு தடுக்கப் பார்த்தாலும், முடக்க முயன்றாலும், அது அணுவளவும் நடக்காது.”

– இவ்வாறு த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி பொதுக் கூட்டத்துக்குப் பின் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“எல்லைகள் கடந்து, மொழியாலும் மனத்தாலும் எப்போதும் இணைந்திருக்கும் நாம், ஒரு புதிய அரசியல் வரலாற்றுக்கான அத்தியாயத்தை இன்று புதுச்சேரி மண்ணில் தொடங்கியிருக்கிறோம்.

நிலப் பரப்பிலும், நிர்வாகக் கட்டமைப்பிலும் சிறிய யூனியன் பிரதேசம் என்றாலும், கட்சி பேதமின்றி, வெறுப்புணர்வின்றி எதிர்க்கட்சியான நம் நிகழ்வுக்கு மிகப் பெரிய ஒத்துழைப்பு கொடுத்து நம் பாதுகாப்பிலும் பொதுமக்கள் பாதுகாப்பிலும் ஜனநாயக அரசியல் மாண்போடு புதுச்சேரி அரசு நடந்துகொண்டிருக்கிறது.

அந்த வகையில், புதுச்சேரி அரசுக்கும் முதல்வருக்கும், உள்துறை அமைச்சர், பொதுப்பணித் துறை அமைச்சர் மற்றும் புதுச்சேரி மாநிலக் காவல் துறைக்கும் நமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். எழுச்சி மிக்க நம் இளைஞர் படையினரும் கட்டுக்கோப்பும் பொறுப்பும் மிக்கவர்கள் என்பதை அவதூறாளர்களுக்குப் புரிய வைத்துள்ளார்கள்.

அதிகாரத்தை வைத்துக்கொண்டு, சட்டத்தை வளைத்து, சூழ்ச்சிகள் உட்பட என்னென்னவோ திட்டம் போட்டு நம் அரசியல் பயணத்தை, மக்கள் சந்திப்பை, பிரச்சார முன்னெடுப்புகளை இந்தக் கபட நாடகத் திமுக அரசு தடுக்கப் பார்த்தாலும், முடக்க முயன்றாலும், அது அணுவளவும் நடக்காது.

தமிழக வெற்றிக் கழகத்தின் எதிர்பார்ப்பை, வேண்டுகோள்களை, உத்தரவுகளை மனதார மதித்து, நிகழ்வை வெகு வெற்றிகரமாக நடத்த ஒத்துழைத்த, அதற்குக் காரணமாயிருந்த தமிழகம், புதுச்சேரி மக்களுக்கும் கழகத் தோழர்களுக்கும் மனமார்ந்த நன்றி. வென்று காட்டுவோம், வாகை சூடுவோம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# த.வெ.க. தலைவர் விஜய் இன்னும் சினிமா வசனம் தான் பேசுகிறார்

## வைகோ கருத்து



த.வெ.க. தலைவர் விஜய் இன்னும் சினிமா வசனமே பேசுகிறார் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கலிங்கப்பட்டி போவதற்காக சென்னையில் இருந்து விமான மூலம் நேற்று மதுரை சென்றார். விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“த.வெ.க. தலைவர் விஜய் இன்னும் சினிமா வசனம் தான் பேசுகிறார். 41 உயிர்கள் பலியானபோனது அவர் பதறவில்லை. அனுதாபமும், இரங்கலும் தெரிவிக்காமல் பொறுப்புணர்ச்சி இன்றி இரவோடு, இரவாக சென்னைக்கு சென்றார்.

40 நாள்கள் பிறகு தன்னுடைய இடத்திற்கு வரவழைத்து துக்கம் கேட்டுள்ளார். இதன் மூலம் அவர் விசித்திரமான முறையை பின்பற்றி இருக்கிறார். அவர் எடுத்து வைக்கும் முதல் அடியே பிழை. அவர் எங்கு வேண்டுமானாலும் பிரச்சாரம் செய்யலாம். அதில் என்ன கருத்துகள் சொல்கிறார் என கவனித்து பார்ப்போம்.” என்று தெரிவித்தார்.

# வாக்கு திருட்டு தேச விரோத செயல்: மக்களவையில் ராகுல் காந்தி காட்டம்



வாக்குத் திருட்டுதான் மிகப் பெரிய தேச விரோத செயல் என்று மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி காட்டமாக குறிப்பிட்டுள்ளார்.

மக்களவையில் நேற்று நடைபெற்ற தேர்தல் சீர்திருத் தங்கள் குறித்த விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய ராகுல் காந்தி,

"இந்தியா என்பது 150 கோடி மக்களின் பிணைப்பு. இதற்கு ஆதாரமாக இருப்பது வாக்குகள். மக்களவையோ, மாநிலங்களவையோ, சட்டப் பேரவையோ, பஞ்சாயத்துகளோ வாக்குகள் இல்லாவிட்டால் இவை எதுவும் இருக்காது. நாடு இதுவரை கண்ட அனைத்து சாதனைகளும் வாக்களிப்பதன் காரணமாகவே நிகழ்ந்துள்ளன.

ஆனால், இதைக் கைப்பற்ற ஆர்எஸ்எஸ் முயல்கிறது. நாட்டில் உள்ள ஒவ்வொரு நிறுவனத்தையும் கைப்பற்ற ஆர்எஸ்எஸ் முயன்று வருகிறது." என்றார்.

அப்போது, ஆளும் தரப்பு எம்.பிக்கள் அமளியில் ஈடுபட்டதை அடுத்து தேர்தல் சீர்திருத்தம் குறித்து பேசுமாறு சபாநாயகர் ராகுல் காந்தியை கேட்டுக்கொண்டார். அப்போது, தேர்தல் சீர்திருத்தம் குறித்து ராகுல் காந்தி எதுவும் பேச வில்லை என நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டினார்.

தனது உரையை தொடர்ந்த ராகுல் காந்தி, "ஆர்.எஸ்.எஸ் மற்றும் பா.ஜ.கவால் தேர்தல் ஆணையம் கைப்பற்றப் பட்டுள்ளது. பல நிறுவனங்களை இவை கைப்பற்றியுள்ளன. என்றாலும், முதலில் கைப்பற்றப்பட்டது தேர்தல் ஆணையம். அமலாக்கத் துறை, தேசிய புலனாய்வு அமைப்பு, சி.பி.ஐ. போன்ற நிறுவனங்களும்கூட கைப்பற்றப்பட்டுள்ளன.

ஆர்.எஸ்.எஸ் மற்றும் பா.ஜ.கவின் கட்டுப்பாட்டில் இருப்ப தால் தேர்தலை வடிவமைக்க தேர்தல் ஆணையம் இவர்களுடன் இணைந்து செயல்படுகிறது.

தேர்தல் ஆணையராக யார் வர வேண்டும் என்பதில் பிரத மரும் உள்துறை அமைச்சரும் ஏன் இத்தனை அக்கறை காட் டுகின்றனர்? வாக்கு திருட்டைவிட மிகப் பெரிய தேச விரோத செயல் வேறில்லை." என்று பேசினார்.

# மாற்றியமைக்கப்பட்ட அமைதி திட்டத்தை அமெரிக்காவுக்கு சமர்ப்பிக்கும் உக்ரைன்





ரஷ்யாவுடனான, போரை நிறைவுக் குக் கொண்டு வரும் முகமாக, மாற்றிய மைக்கப்பட்ட அமைதி திட்டத்தை, அமெரிக்காவிடம் சமர்ப்பிக்க உக்ரைன் தயாராகிறது.

ரஷ்யாவுக்கு தமது நிலப்பகுதியை விட்டுக் கொடுக்காத வகையில் இந்த ஒப்பந்தம் அமைந்துள்ளது.

முன்னதாக, அமெரிக்காவின் அமைதி திட்டத்தின்படி, ரஷ்யாவுக்கு, உக்ரைனின் நிலத்தை விட்டுக் கொடுக்கும் அம்சம் இடம்பெற்றிருந் தது.

எனினும், வொலோடிமிர் ஜெலென்ஸ்கி, எந்த நிலத்தையும் ரஷ்யாவிற்கு விட்டுக் கொடுக்க முடியாது என்றும் அது உக்ரைன் அரசியல் சட்டத்திற்கும் சர்வதேச சட்டத்திற்கும் முரண்படும் எனவும் கூறியுள்ளார்.

இந்த நிலையில், ஐரோப்பிய மற்றும் நேட்டோ தலைவர்களை சந்தித்த பின் னர், அமெரிக்காவுக்கு, தமது புதிய திட் டத்தை விரைவில் அனுப்பலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, அமெரிக்கா முன்வைத்த 28 அம்ச அமைதி முன்மொழிவு யுக் ரைன் மற்றும் ஐரோப்பிய நாடுகளால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அது ரஷ்யாவுக்கு சாதக மானது என்றும் அந்த நாடுகள் விமர் சனம் வெளியிட்டுள்ளன.






# இந்தோனேசியாவில் 7 மாடி கட்டடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 20 பேர் உயிரிழப்பு

இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள 7 மாடிக் கட்டடம் ஒன்றில் நேற்று செவ்வாய்க் கிழமை ஏற்பட்ட தீ விபத்தில், 20 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மத்திய ஜகார்த்தாவில் உள்ள ஒரு 7 மாடி கட்டடம் ஒன்றின் முதல் தளத்திலிருந்த மின்கலன் வெடித்ததில் பிற்பகல் ஆரம்பத்தில் தீ விபத்து ஏற்பட்டதாகவும், அதன் பின்னர் தீ மேல் தளங்களுக்குப் பரவியதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதுவரை, 5 ஆண்களும் 15 பெண்களும் உட்பட 20 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என மத்திய ஜகார்த்தா பொலிஸ் தலைவர் சுசாத்யோ பூர்ணமோ கொண்ரோ செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களில் ஒருவர் கர்ப்பிணிப் பெண் என்றும் அவர் மேலும் கூறினார்.

பெரும்பாலான பாதிக்கப்பட்டவர்கள் தீக்காயங்களால் பாதிக்கப்படவில்லை என்றும், அவர்கள் பெரும்பாலும் மூச்சுத் திணறல் காரணமாகவே இறந்திருக்கலாம் எனவும் சுசாத்யோ தெரிவித்தார்.

உடலங்கள் உடற்கூறு ஆய்வுக்காக பொலிஸ் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

தீ விபத்து ஏற்பட்ட இந்தக் கட்டடம், சுரங்கம் மற்றும் விவசாயத் துறைகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு வான்வழி ஆய்வுக்கான ட்ரோன்களை வழங்கும் டெர்ரா ட்ரோன் இந்தோனேசியா என்ற நிறுவனத்தின் அலுவலகமாகும்.

இந்த நிறுவனம் ஜப்பானைத் தளமாகக் கொண்ட டெர்ரா ட்ரோன் கூட்டுத்தாபனத்தின் இந்தோனேசியப் பிரிவு ஆகும்.

தீ அணைக்கப்பட்ட நிலையில், கட்டிடத்திற்குள் இன்னும் சிக்கி இருக்கக்கூடியவர்களைத் தேடும் பணி தொடர்கிறது என தெரிவிக்கப்படுகிறது.





# நிவாரண மோசடி தொடர்பில் பொதுமக்களுக்கு எச்சரிக்கை

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாகக் கூறி, பாதிக்கப்பட்டவர்களின் தனிப்பட்ட தகவல்களைச் சேகரிக்கும் பல குறுஞ்செய்திகள் சமூக ஊடகங்கள் மூலம் பரவுவது அவதானிக்கப்பட்டுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அனர்த்த நிவாரணத்திற்கான தரவு சேகரிப்புப் பணிகள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்களில் நியமிக்கப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட கள அதிகாரிகள் மற்றும் கிராம அலுவலர்கள் மூலம் முறையான விதத்தில் மேற்கொண்டு வருகின்றன.

எனவே, பொதுமக்கள் இவ்வாறான போலிச் செய்திகளால் ஏமாற வேண்டாம் என்றும், அத்தகைய தரப்பினருடன் தங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பகிர்வதைத் தவிர்க்குமாறும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.

அத்துடன், இத்தகைய மோசடிகளில் ஈடுபடுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.




# உரிமையின் ஒளிக்கதிர் மனிதநேயத்தின் விழிப்புணர்வு...!

பிறப்பில் பாகுபாடில்லை, உரிமையில் கூடாதே,
இருப்பது மனிதன் என்ற ஒற்றை அடையாளமே.
இருள் நிறைந்த சிந்தனைகள் அழிக,
ஒளி கொண்ட உரிமைகள் பரவட்டும் அகிலம் முழுதாக!

பேசும் உரிமை, வாழும் உரிமை,
பயமின்றி நடப்பதற்கான உரிமை,
நியாயம், கல்வி, சமத்துவம்
மனித மனதில் புதிதாய் மலர வேண்டும்.

பண்பாட்டின் பெயரில் பிணிப்போ,
பாதுகாப்பின் பெயரில் புறக்கணிப்போ –
இவை அனைத்தும் ஒழிந்தால்தான்
உண்மையான 'மனிதநேயம்' உயிர் பெறும்!

நம் விழிகள் விழிக்கட்டும், வன்முறைக்கு எதிராக,
நம் குரல் கீறட்டும், அமைதிக்காகவும் நியாயத்திற்காகவும்.
ஒரு மனிதனின் உரிமை மீறப்படும்போது,
அனைத்துமானவனும் மௌனமாய் வாழக் கூடாது!

உரிமைகள் என்பது வலியுறுத்த வேண்டிய சத்தம்,
அது யாருக்கும் பரிசல்ல – பிறப்புரிமை மட்டுமே!

**நடராசா கோபிராம்**
**உளவியல்சிறப்புக்கலைமாணவன்**
**யாழ்.பல்கலைக்கழகம்.**




# மனித உரிமை என்பது வாழ்வியல் தத்துவம்!

மனிதன் பிறந்தவுடன் அவனுக்கு கிடைக்க வேண்டிய முதன்மையான சொத்து ‘உரிமை’. ஆனால் உலக அரசியலும், பொருளாதாரப் போட்டிகளும், சாதி, இனம், மத எல்லைகளும், அதிகாரப் பிணக்குகளும் இந்த அடிப்படை உண்மையை வெட்டிக் கொண்டு போகும் நிலையில், மனித உரிமைகள் தினம் ஒரு சின்னத் தேதியாக இல்லாமல், மனித நாகரிகம் எவ்வளவு தடுமாறி நிற்கிறது என்பதைச் சொல்வது போல ஒரு கண்ணாடி. மனித உரிமை என்ற கருத்து தத்துவ அடிப்படையில் மனிதன் ஒரு “intrinsic value” கொண்ட உயிர் என்பதைக் கொண்டே உருவானது. யார் பிறந்தவராக இருந்தாலும், கல்வி, செல்வம், வர்க்கம், நாடு என்ற பிரிவுகளிலிருந்து தப்பிவிடும் ஒரு “மனிதத் தன்மை” இருப்பதாகத் தான் முதல் முதலில் உலக அரசியல் தத்துவஞானிகள் கூறினர். ஆனால் இந்த கோட்பாடு காகிதங்களில் அழகாக இருந்தாலும், உலகின் தர நிலை அதை ஒப்புக்கொள்ளாத உண்மைகளைதான் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது.

உலகளவில் பார்க்கும்போது, ஐ.நா. உருவான பின்னர் 1948 ஆம் ஆண்டு Universal Declaration of Human Rights (UDHR) மனித உரிமைகளின் global global framework ஆக உருவானது. இது ஒரு வகையில் மனித வரலாற்றின் பெரிய மாற்றுப் புள்ளி. ஆனால் பிரச்சினை என்னவென்றால், உரிமை பற்றிய இந்த அறிக்கை “சிந்தனை” ஆனது மட்டுமே “செயல்” ஆகவில்லை. அதிகாரம் கொண்ட நாடுகள் தமக்கு ஏற்ப விதிகளை மாற்றிக் கொண்டன, ஏழை நாடுகள் நிதி சார்ந்த அழுத்தத்தால் மனித உரிமையை தியாகம் செய்தன, மத்தியில் சாதாரண குடிமக்கள் தான் தாக்கப்பட்டார்கள். வருடம் தோறும் Human Rights Watch, Amnesty International, UNHRC reports காட்டும் data ஒரு விடயத்தை மட்டும் உறுதிப்படுத்துகிறது. மனித உரிமைகள் உலகளவில் இன்னும் “பரீட்சைக்கு எழுதும் theory” மாதிரி தான் practical Mf pass ஆகவில்லை.

சமீபத்திய உலக செய்திகளை பார்த்தாலே படம் தெளிவு. காசா போரில் குழந்தை மரணங்கள், உக்ரைன் யுத்தத்தால் இலட்சக்கணக்கானவர்கள் இடம்பெயர்வு, ஆப்ரிக்காவின் பல பகுதிகளில் உணவுக் குறைபாடு காரணமாக நடக்கும் மனித உரிமை மீறல்கள், ஆசியாவில் blogger, activist, journalistகள் மீது இறுக்கமான கண்காணிப்பு என இவை எல்லாம் ஒரு சுருக்கமான பட்டியல் மட்டுமே.

மனித உரிமை என்பது ஒரு “வருடாந்திர விழா நாள்” அல்ல அது ஒவ்வொரு நாளும் காக்கப்பட வேண்டிய கடமை என்பதை உலக நாடுகள் இன்னும் உணரவில்லை. முக்கிய பிரச்சினை என்னவென்றால், மனித உரிமையை யார் காக்க வேண்டும்? அரசு? சர்வதேச அமைப்புகள்? அல்லது சமூகம்? உண்மையில் பார்த்தால் எல்லோரும். ஆனால் நிஜத்தில் யாரும் முழுமையாக செய்யவில்லை.

இதை உளவியல் நோக்கில் பார்ப்பது இங்கே மிகவும் முக்கியம். மனித உரிமை மீறல்களின் அடிப்படையில் உள்ள மனநிலை ஒரு பொதுவான விளக்கம் கொண்டது. “power psychology.” அதிகாரம் கையில் வந்தவுடன் சில மனிதர்கள் “மேலோர் – கீழோர்” பிரிவை உருவாக்கத் தொடங்குகிறார்கள். இந்த dominance behaviour evolutionary psychology லேயே rooted. ஆனால் நாகரிகம் வளர்ந்த சமுதாயத்தில் இந்த நடத்தை கட்டுப்படுத்தப்பட வேண்டிய ஒன்று. அது நடக்காததால்தான் torture, censorship, discrimination, excessive policing, ethnic targeting மாதிரி செயல்கள் உருவாகின்றன. Social psychology தெளிவா சொல்றது, ஒரு குழுவை பல வழிகளில் என்று பிரித்தவுடனே conflict, prejudice, dehumanization வரும். இதை எந்த நாட்டில் பார்த்தாலும் மனித உரிமை மீறலின் அடிப்படை இந்த dehumanization தான்.

தொடர்ச்சி▼




# மனித உரிமை என்பது வாழ்வியல் தத்துவம்!

தொடர்ச்சி▲

இலங்கை சூழலை நேராகப் பார்ப்போம். நாட்டின் குடிமக்களின் மனித உரிமைகள் பற்றி பேசும்போது, அரசியல் மோதல்கள், இனப்பிரச்சினைகள், போர் விளைவுகள், பொருளாதார வீழ்ச்சி என இவை எல்லா வற்றின் நிழல் இன்னும் பெரியதாகவே இருக் கிறது. பல UNHRC resolution இன்னும் open status லேயே இருக்கின்றன. போர் பிந்தைய accountability காணாமல் போனவர்கள், மீதமிருக்கும் இராணுவப் பதற்றம், மற்றும் சில பகுதிகளில் இருக்கும் structural discrimination எல்லாம் மனித உரிமை தரத்தில் குறைபாடு உள்ளதை மறைக்க முடியாது. அதேசமயம், இலங்கை ஒரு பல்வேறு இன – மொழி – மதத்தி னரைக் கொண்ட நாட்டு diversity இருக்கிற இடத் தில் உரிமைகளின் பாதுகாப்பு இன்னும் அதி கம் தேவையானது. ஆனால் இடையிடையே வரும் அரசியல் instability காரணமாக மனித உரிமை பிரச்சினைகள் அதிகப்படுத்தப்படுகின்றன் அதைக் கையாள அரசியல் விருப்பம் பல நேரங்க ளில் இல்லை.

இது ஒருபக்கம். மற்றொருபக்கம், உலக பொரு ளாதார அழுத்தங்கள் காரணமாக குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் வீழ்ச்சி கூட மனித உரிமை பிரச்சினையை உருவாக்குகிறது. Economic rights, social rights என்ற கட்டங்களில் இலங்கை யில் inequality அதிகரித்துக்கொண்டே போனது. உணவு, மருத்துவம், கல்வி all fundamental rights. ஆனால் இது பல குடும்பங்களுக்கு luxury மாதிரி ஆகிடுச்சு. இது psychological impact-I dangerous level கொண்டு போகுது. Chronic stress, helplessness, learned helplessness போன்ற மன நிலை ஏழை சமூகங்களில் அதிகமாகக் காணப்படு கிறது. மனித உரிமை பாதுகாப்பு என்பது physical safety மட்டும் இல்லை. mental dignity யும் equally important.

மனித உரிமைகள் தத்துவ ரீதியாக "நான் சுதந் திரமாக வாழ்கிறேன் என்றால், நீயும் சுதந்திர மாகவே வாழ வேண்டும்" என்ற reciprocal ethicsலே இருக்கிறது. ஆனால் இப்போது உலகில் ஒரு trend கிளம்பியது. "உரிமை எனக்கு, கட்டுப்பாடு உனக்கு." இந்த cognitive dissonance தான் உலக மனித உரிமையின் மிகப்பெரிய எதிரி. பெரும்பாலான நாடுகள் மனித உரிமை பேசும், ஆனால் தங்களின் அரசியலுக்கு எதிரான விடயங்களில் அதை மறுக் கும் double standard செயல்பாடுகள் மிகப்பெரிய hypocrisy. இதனால் உலகளவில் மனித உரிமை மதிப்புக் குறைவதற்குக் காரணம் policy gap அல்ல moral gap.

உலகின் தொழில்நுட்ப வளர்ச்சி கூட ஒரு இரட்டை வாளாக மாறிவிட்டது. Digital surveillance, biometric control, social media manipulation இவை privacy என்ற உரிமையை மிகவும் ஆபத்தான முறையில் குலைக்கிறது. பல நாடுகளில் VI அடிப்படையிலான surveillance systems அமுல்படுத்தப்படும் நிலை யில், குடிமக்களின் தனிநபர் சுதந்திரம் (individual liberty) open question ஆக இருக்கிறது. Research studies காட்டும் ஒன்று என்னவென் றால்: அதிக surveillance உள்ள சமூகங்களில் psychological distress மற்றும் political fear அதி கரிக்கும். People behave less freely when they know they are watched. இது "chilling effect" என்று சட்டத்திலும் உளவியலிலும் குறிப்பிடப்படும் xU phenomenon. மனித உரிமை என்று பேசும் உலகம் அதே நேரத்தில் மனிதனின் privacy ஐ ஒழித்துக் கொண்டிருக்கிறது.

இதிலிருந்து வேறொரு முக்கிய அம்சத்துக்கு வர லாம். social rights உலகின் பல நாடுகளில் இன் னமும் பெண்கள், குழந்தைகள், குடியேறிகள், refugees, ethnic minorities, disabled persons ஆகி யோரின் உரிமை மீறல்கள் தொடர்கிறது. சுமார் 35 வீத பெண்கள் உலகளவில் வாழ்நாளில் ஒரு கட்டத் தில் வன்முறையைச் சந்திக்கிறார்கள். Child labour உலகில் 160 மில்லியன். Refugee population 120 மில்லியனைத் தாண்டியுள்ளது. இவை எண்கள் இல்ல மனிதர்களின் வாழ்க்கை. இதில் psychology சொல்வது, repeated trauma ஒரு சமூகத்தின் collective mindset–ஐ itself change பண்ணி டும். "Normalized suffering" உருவாகும். இதுதான் மிகவும் மோசமான நிலை. மக்கள் தங்களுக்கு வரும் துன்பத்தை "பரவாயில்லை" என்று ஏற்றுக்கொள்ளத் தொடங்குவது.

இலங்கையிலும் இதே நிலை பல இடங்க ளில் உள்ளது. வடக்குக் கிழக்கில் மட்டுமல்ல ஏனை இடங்களிலும் இந்த நிலைமை தொடர்கி றது.

ஆனால் இந்த நிலையை மாற்றுவதற்கு முதல் தேவை உண்மையைப் பார்க்கும் மனப்பாங்கு. நாட்

தொடர்ச்சி▼




# மனித உரிமை என்பது வாழ்வியல் தத்துவம்!

தொடர்ச்சி▲

டில் எப்போதும் “national security vs human rights”என்ற debate unnecessarily உருவாக்கப்படுகிறது. உண்மை நேராக இதுதான பாதுகாப்பு மற்றும் உரிமை இரண்டுமே ஒரே நாட்டின் தேவைகள். ஒன்று மற்றொன்றுக்கு எதிரி அல்ல. உரிமை இல்லாத பாதுகாப்பு dictatorship ஆகிவிடும். பாதுகாப்பு இல்லாத உரிமை ஒரு empty statement ஆகிவிடும். ஒரு balanced model தான் ஒரு நாட்டின் னபைவெைவலஐ உகந்தபடி காக்கும்.

இப்போது நேராக சொல்ல வேண்டிய கடுமையான உண்மை, மனித உரிமையைப் பாதுகாக்கும் சட்டங்கள் உள்ளன, அமைப்புகள் உள்ளன, resolutionகள் உள்ளன. இல்லாதது political honesty மற்றும் social courage. பொய் இல்லாமல் சொல்லணும் எனில், குடிமக்கள் கூட சில சமயம் மனித உரிமை பற்றிய விழிப்புணர்வில்லாமல் செய்கிறார்கள். சில பிரச்சினையை “அவர்களுடையது” என்று தள்ளிவிடுகிறார்கள். மனித உரிமை என்பது மற்றவருக்கே மட்டும் என்கிற எண்ணமே மிகப்பெரிய அறியாமை. நாளை அது உன்னைத் தாக்கும்.

Rights are not charity; they are safeguards.

அதுபோலவே Psychological angle இல் முக்கியமான புள்ளி ஒன்று – உரிமை பாதுகாப்பு பெறும் சமுதாயங்களே mental health இல் நல்ல வளர்ச்சி காணும். Fear-free environments create better cognitive development, better social trust, and better economic productivity. இதை தொடர்பான பல cross-country studies வெளிப்படுத்தியிருக்கின்றன. அதனால் human rights is not a luxury. அது ஒரு country’s long-term stability க்கு அடிப்படை.

மனித உரிமைகள் தினம் இந்த அனைத்து பரிமாணங்களையும் நினைவுப்படுத்தும் ஒரு திடமான சநஅனைெநச. ஒரு நாடு எவ்வளவு civilized என்று அளப்பது அதன் GD யைக் கொண்டு அல்ல. அதன் குடிமக்கள் எவ்வளவு னபைவெைவலயுடன் வாழ்கிறார்கள் என்பதை வைத்துத்தான். உலகம் வளர்ந்தது ஆனாலும் மனிதன் இன்னும் “உரிமை” க்காக போராடிக்கொண்டிருப்பது மிகப் பெரிய irony. நாம் civil society என்று பேசிக்கொண்டாலும், பல இடங்களில் இன்னும் basic dignity கூட இல்லாத நிலை இருக்கிறது.

இலங்கை போன்ற நாடுகளுக்கு இந்த நாள் இன்னும் முக்கியம், ஏனெனில் நாம் conflict–after society. Healing, reconciliation, justice—all are long processes. அதை shortcut செய்ய முடியாது. Accountability and empathy இரண்டும் சேர்ந்துதான் ஒரு destroy ஆன சமுதாயத்தை மீண்டும் உருவாக்க முடியும். அரசாங்கம் மட்டுமல்ல மக்கள், கல்வி அமைப்புகள், சமூக அமைப்புகள், ஊடகம் எல்லாம் சேர்ந்து தான் மனித உரிமை பாதுகாப்பு நடக்கும்.

எல்லாவற்றையும் சேர்த்து பார்க்கும்போது, மனித உரிமை என்பது ஒரு சட்டப் பிரிவு இல்லை அது ஒரு வாழ்வியல் தத்துவம். “ஒவ்வொரு மனிதரும் மதிப்புக்குரியவர்” என்ற simple linejhd; entire human rights philosophy. அதை world follow செய்ய தெரியவில்லை. அதை individuals follow செய்யப் பயப்படுறாங்க. அதை power structures follow செய்ய விருப்பம் இல்ல. அதனால் தான் மனித உரிமைகள் தினம் ஒரு சாதாரண தேதியாக இல்லாமல், இன்னும் ஒரு “unfinished mission” ஆகவே இருக்கிறது.



**நடராசா கோபிராம்,**
**உளவியல் சிறப்புக்கலை மாணவன்**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

# திருமுறிகண்டி ஆலய நிதியத்தினால் உலர் உணவு நிவாரணம் விநியோகம்



(சண்முகம் தவசீலன்)

திருமுறிகண்டி ஆலய நிதியத்தினால் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு ரூபா நாற்பது லட்சம் பெறுமதியான உலர் உணவு நிவாரணம் விநியோகிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைய வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட திருமுறிகண்டி ஆலய சூழலில் உள்ள திருமுறிகண்டி, இந்துபுரம், பனிக்கன்குளம் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் வாழும் 874 குடும்பங்களிற்கு மொத்தமாக ரூபா 4.08 மில்லியன் பெறுமதியான உலர் உணவு நிவாரணம் திருமுறிகண்டி ஆலய நிதியத்தினால் வழங்கும் ஆரம்ப நிகழ்வு நேர்ரு திருமுறிகண்டி ஆலயத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் தஅ.உமாமகேஸ்வரனினால் உலர் உணவு நிவாரணப் பொதிகள் கையளிக்கப்பட்டன.

திருமுறிகண்டி ஆலயமானது இந்து சமய கலாசார அலுங்கள் திணைக்களத்தின் இந்துப் பண்பாட்டு நிதியத்தால் நிர்வகிக்கப்பட்டு வருவது குறிப்படுத்தக்கது.

இந்த நிகழ்வில் ஒட்டுசுட்டான் உதவிப் பிரதேச செயலாளர், மாவட்ட இந்து கலாசார திணைக்களத்தின் உத்தியோகத்தர், கிராம அலுவலகர்கள், திருமுறிகண்டி பிரதேச மட்ட அமைப்புக்களைச் சேர்ந்த பலர் கலந்துகொண்டனர்.







# வவுனியாவில் மூன்று இடைத்தங்கல் முகாம்களில் 79 குடும்பங்கள் தொடர்ச்சியாகத் தங்க வைப்பு!

(கி.வசந்தன்)

வவுனியாவில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிப்புற்ற 79 குடும்பங்களை சேர்ந்த 232 பேர் தொடர்ச்சியாக இடைத் தங்கல் முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ளனர் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு நேற்றுத் தெரிவித்துள்ளது.

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடர் காரணமாக வவுனியா மாவட்டத்திலும் கடுமையான பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

இந்நிலையில் வெள்ளம் காரணமாக மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மொத்தமாக 58 இடைத் தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டு மக்கள் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

தற்போது மழைவீழ்ச்சி குறைவடைந்த நிலையில முகாம்களில் இருந்த மக்கள் மீண்டும் தமது வீடுகளிற்குத் திரும்பியிருந்தனர்.

இருப்பினும் கடுமையான பாதிப்புக் களை சந்தித்த வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் 3 இடைத் தங்கல் முகாம்கள் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றன. அங்கு 79 குடும்பங்களைச் சேர்ந்த 232 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.




# வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட வெருகல் பிரதேசத்தில் சிரமதானம்

(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப் பட்ட வெருகல் பிரதேச சபைக்கு உட்பட்ட ஈச்சலம்பற்று வைத்தியசாலை, முத்துச்சேனை மகா வித்தியாலயம், வெருகல் முருகன் ஆலயம் போன்ற இடங்களில் தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் திருகோணமலைப் பிராந்திய அமைப்பு செயலாளர் தோழர் சின்ன மோகன் தலைமையில் 'சமத்துவம் தொண்டர்படை'யினரால் நேற்று சிரமதானம் சொய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது.











# பறங்கி ஆறு, பாலி ஆறு வெள்ளம் தொடர்பாக மன்னாரில் நேற்று முன்னெச்சரிக்கை விடுப்பு

**(மன்னார் நிருபர்)**

பறங்கி ஆறு, பாலி ஆறு வெள்ளம் தொடர்பாக மன்னாரில் நேற்று முன்னெச்சரிக்கை ஒன்றை மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு விடுத்தது.

வடகிழக்கு பருவமழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழையினால் பேராறு குளத்தின் பாதுகாப்பு கருதி வான் கதவு ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை திறக்கப்பட்டுள்ளது.

இதனால் மன்னார் மாவட்ட மாந்தை மேற்கு பிரதேசத்தினுடாக செல்லும் பறங்கி ஆறு, சிப்பி ஆறு மற்றும் பாலி ஆறு ஆகியவற்றின் நீர்மட்டம் குறிப்பிட்ட அளவு உயர்வதற்கான வாய்ப்பு உள்ளது.

எனவே ஆற்றின் தாழ்நில பிரதேசங்களான சீது விநாயகர்புரம், கூராய், தேவன்பிட்டி, ஆத்தி மோட்டை, அந்தோணியார்புரம், பாலி ஆறு ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்கவும்.

கால்நடை மேய்ப்பர்களும் வெள்ள அனர்த்தத்தில் இருந்து பாதுகாப்பு பெறும் வகையில் உங்கள் கால் நடைகளை பராமரிக்கவும். தொடர்ச்சியாக வழங்கப்படும் முன்னெச்சரிக்கைகளை கவனித்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது.




# 19 வயதுக்குட்பட்ட ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் யாழைச் சேர்ந்த இருவர் இலங்கை அணியில் சேர்ப்பு

19 வயதுக்குட்பட்ட ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ள 15 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபையால் அறிவிக்கப்பட்டுள்ள அணியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இரண்டு வீரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம்சென்ஜோன்ஸ்கல்லூரியின் குகதாஸ் மாதுளன் மற்றும் ஹாட்லி கல்லூரியின் விக்னேஸ்வரன் ஆகாஷ் ஆகியோர் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இன்று 10ஆம் திகதி இலங்கை அணி ஐக்கிய அமீரகத்திற்கு பயணிக்கவுள்ளது.

இலங்கை அணி நேபாளம், ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷுடன் குழு பி இல் இடம்பெற்றுள்ளது. முதல் போட்டியில் 13ஆம் திகதி நேபாள அணிக்கு எதிராக இலங்கை அணி விளையாவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாதிப்புற்ற சகல பஸ் சேவைகளும் டிச.31 இற்கு முன் மீள ஆரம்பிக்கும்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க நம்பிக்கை



(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் நாடு முழுவதும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான அனைத்து பஸ் சேவைகளையும் மீண்டும் தொடங்க அரசாங்கம் எதிர்பார்ப்பதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

வெள்ளத்தால் சேதமடைந்த சிலாபம் – கொழும்பு ரயில் பாதை, இரணைவில பாலம், இலங்கை போக்குவரத்து வாரியத்தின் சிலாபம் பஸ் பணிமனை மற்றும் சிலாபம் – புத்தளம் ரயில் பாதையில் உள்ள பத்துலு ஓயா பாலத்திற்கு அருகிலுள்ள பகுதி ஆகியவற்றை அமைச்சர் பார்வையிட்டார்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான சிலாபம் பஸ் பணிமனைக்கு தினசரி நடவடிக்கைகளுக்கு 56 பஸ்கள் தேவைப்படுகின்றன எனவும், அவற்றில், சிலாபம் டிப்போவில் நிறுத்தப்பட்டிருந்த 27 பஸ்கள் வெள்ளத்தால் சேதமடைந்துள்ளன எனவும் டிப்போ கண்காணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

தனது டிப்போ ஊழியர்களின் மாதாந்த சம்பளத்திற்கு ரூ. 9.3 மில்லியன் தேவைப்படுவதாகவும், சம்பளத்திற்காக வைத்திருந்த பணம் பழுதடைந்த பஸ்களைச் சரிசெய்ய பயன்படுத்தப்படுவதாகவும் டிப்போ கண்காணிப்பாளர் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய சூழ்நிலை காரணமாக இந்த மாதம் ஊழியர்களின் சம்பளம் வழங்குவது ஒரு பிரச்சினையாக மாறியுள்ளது என்பதையும் டிப்போ கண்காணிப்பாளர் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூறியவை வருமாறு:–

சிலாபத்திலிருந்து வென்னப்புவ மற்றும் நைனாமடம் வரை செல்லும் கடலோர நெடுஞ்சாலையில் உள்ள இரணைவில பாலம் வெள்ளம் காரணமாக சேதமடைந்துள்ளது. இந்த பாலத்திற்கு பதிலாக “பெய்லி பாலம்” எனப்படும் தற்காலிக இரும்புப் பாலத்தை விரைவாக நிறுவத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பாலத்தை நிர்மாணிப்பதற்கு தேவையான பாகங்கள் அந்த இடத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

மேலும், குடவெவ ரயில் நிலையம் மற்றும் பத்துலு ஓயா பாலத்திற்கு அருகில் வெள்ளம் ஏற்பட்டதால் ரயில் பாதை சேதமடைந்துள்ளது. சேதமடைந்த ரயில் பாதையின் தொடர்புடைய பகுதிகளை தரைவழியாக அடைவது மிகவும் கடினம். இருப்பினும், சேதமடைந்த பகுதிகளை விரைவாக செய்து முடிப்பதில் ரயில்வே ஊழியர்கள் சவாலை எதிர்கொண்டுள்ளனர். எனவே, சிலாபம் – கொழும்பு ரயில் சேவையை இரண்டு மாதங்களுக்குள் இயக்க முடியும். பின்னர் சிலாபம் – புத்தளம் ரயில் பாதையில் பத்துலு ஓயா பாலத்திற்கு அருகில் சேதமடைந்த பகுதியை ரயில்வே ஊழியர்களால் சரி செய்ய முடியும்.

இதற்கிடையில், வெள்ளம் காரணமாக சேதமடைந்த போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்களை பயணிகள் போக்குவரத்திற்கு மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவது மற்றொரு பிரச்சினையாகும். போக்குவரத்து சபை ஊழியர்கள் தற்போது அதற்கான தீவிர முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர். அரசாங்கம் அந்த ஊழியர்களின் பணிக்காகவும் நன்றி தெரிவிக்க வேண்டும்.

ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் இதற்காக அரசாங்கம் அளித்த பங்களிப்பைக் கருத்தில் கொண்டு, டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் அனைத்து இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களையும் மீண்டும் சேவையில் ஈடுபடுத்த முடியும் என்று அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது.– என்றார்.

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கயான் ஜனக மற்றும் அஜித் கிஹான் ஆகியோரும் இந்த விஜயத்தில் பங்கேற்றனர்.










# மஸ்கெலியா மறே தோட்டத்தில் மண்சரிவு ஆபத்து 71 குடும்பங்களைச் சேர்ந்த 311 பேர் வெளியேற்றம்

(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா, மறே தேயிலை தோட்டத்தின் கெடஸ் பிரிவில் மண்சரிவு ஆபத்து இருக்கின்றமையைஒட்டி, சரிவில் அமைந்துள்ள தோட்ட வீடுகளில் வசிக்கும் 71 குடும்பங்களைச் சேர்ந்த 311 உறுப்பினர்கள் நேற்று முன்தினம் அப்பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டனர் நல்லதணீ கிராம அலுவலர் டபிள்யூ. எம். சிசிகுமாரி தெரிவித்தார்.

நிலச்சரிவு சுமார் 25 அடி நீளம் கொண்டது இது தொடர்பாக தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று கிராம அலுவலர் சசிகுமாரி தெரிவித்தார்.

வெளியேற்றப்பட்டவர்கள் தற்போது தற்காலிகமாக நல்லதண்ணி தமிழ் கல்லூரி மற்றும் குழந்தை பராமரிப்பு மையத்தில் தங்கியுள்ளனர். மேலும் 129 பாடசாலை மாணவர்களும் சிறப்புத் தேவைகள் உள்ள ஒருவரும் அதில் உள்ளனர் என்று திருமதி சிசிகுமாரி கூறினார்.

நோர்வூட் பிரதேச செயலகத்தின் பேரிடர் பிரிவு, வெளியேற்றப்பட்டவர்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்கியுள்ளது என்று நல்லதண்ணிய கிராம அலுவலர் திருமதி ஆர். எம். சிசிகுமாரி தெரிவித்தார்.













# மாங்தை கிழக்குப் பிரதேச செயலகத்தில் நேற்று 'கிளீன் சிறிலங்கா' திட்டத்தின் நடமாடும் சேவை

**(பா.சதீசன்)**

உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, Clean Sri Lanka செயலகம் மற்றும் மாவட்ட செயலகம் முல்லைத்தீவு என்பன 'க்ளீன் ஸ்ரீ லங்கா – ஒருங்கிணைந்த மற்றும் நிலைத்த நாடு" என்ற தேசிய திட்டத்திற்கு அமைவாக நடமாடும் சேவைகள் மற்றும் விசேட மக்கள் நலன்புரி வேலைத்திட்டம் நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்டம், மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் செல்வி சர்மிலி தலைமையில் நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவையை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமா மகேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நடமாடும் சேவையில் பல்வேறு சேவைகள், பணிகள் மக்களுக்கு ஒரே நாளில் முன்னெடுக்கப்பட்டன.

இவற்றுடன் முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரத்திணைக்களத்தின் விசேட மருத்துவமுகாம், பொதுமக்களிற்கான விழிப்புணர்வு நிகழ்வுகள், கலாசார நிகழ்வுகள் என்பனவும் இடம்பெற்றன.

அதேநேரம் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. வெள்ள நீரில் மூழ்கிய வீட்டினை சுத்தம் செய்வதற்காகல் பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய நிதி காசோலையாக வழங்கி வைக்கப்பட்டது.

நேற்றையதினம் இந்த நடமாடும் சேவை வெலிஓயா பிரதேச செயலகத்திலும் நடைபெற்றது.

இந்தநடமாடும் சேவையில் பெருந்திரளான மக்கள் ஆர்வத்துடன் பங்கு பற்றினார்கள்.















# மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தில் ‘விடுதலையின் விதைகள்’ அரங்கேற்றம்

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டம், மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் Clean Sri Lanka திட்டத்தின் நடமாடும் சேவை நேற்றையதினம் இயம்பெற்றிருந்தது. அதில் ஜெயம் நாடகக் கல்லூரியின் தயாரிப்பில் ‘விடுதலையின் விதைகள்’ எனும் தெருவெளி நாடகம் நேற்று சிறப்பாக அரங்கேற்றப்பட்டது.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ. உமாமகேஸ்வரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கலைஞர்களை வாழ்த்தினார்.

ஜெயம் ஜெகன் அவர்களின் பாடல் வரிகள், எழுத்துரு மற்றும் நெறியாள்கையில் உருவான இந்த நாடகம், ஜெயம் நாடகக் கல்லூரி கலைஞர்களினால் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று உள்ளிட்ட பல பிரதேச செயலகங்களில் தொடர்ந்து அரங்கேற்றப்பட்டு மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

சமகாலப் பிரச்சினைகளை மையப்படுத்தி சமூகத்தில் நிலவும் சிக்கல்களை நயமாக வெளிப்படுத்திய இந்த நாடகம், பார்வையாளர்களிடமும் கலந்து கொண்ட அரச அதிகாரிகளிடமும் அதிகமான பாராட்டைப் பெற்றது.

நாடகத்தின் உள்ளடக்கம் தற்போதைய காலத்தின் தேவையை பிரதிபலிப்பதாகவும், இத்தகைய சமூக விடயங்கள் தொடர்பாக தொடர்ச்சியாக அரங்கேற்றப்பட வேண்டும் என பார்வையாளர்கள் வலியுறுத்தினர்.


















# திரிவைச்சகுளம், கிவுல் ஓயா நில அபகரிப்பு; ஒரு மாத காலத்திற்குள் தீர்வு காணப்படுமாம்!

## ரவிகரன் எம்.பியின் கடும் எதிர்ப்புக்கு ஆளுநந்தரப்பு சமாளிப்பு

**(விஜயரத்தினம் சரவணன்)**

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட திரிவைச்சகுளம் பகுதியில் பெரும்பான்மை இனத்தவர்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் வரையில் அடர்வனங்களை அழித்து ஆக்கிரமிப்புச் செயற்பாட்டை மேற்கொண்டுள்ளமை மற்றும் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமித்து 'கிவுல்ஓயா' நீர்ப்பாசனத் திட்டத்தை செயற்படுத்தவுள்ளமை என்பவற்றிற்கு கடுமையான எதிர்ப்பினை வெளியிட்ட வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், இவற்றிற்கு எதிராக ஆயிரம் பேர் வரையில் மக்களைத் திரட்டி வவுனியா வடக்கு பிரதேசசெயலகத்தை முற்றுகையிட்டு பாரிய ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொள்ளவுள்ளனர் எனவும் எச்சரித்துள்ளார்.

இந்நிலையில் ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ள வேண்டாமெனத் தெரிவித்த வவுனியா மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும், பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க, ஒரு மாத காலத்திற்குள் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் தாம் கவனம் செலுத்துவார் எனத் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று்  இடம்பெற்றது. அந்தக் கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில் –

வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட திரிவச்ச குளம் பகுதியில் பெரிய மரங்கள் வீழ்த்தப்பட்டு சட்டவிரோதமாக பாரிய அளவில் அடர்வனங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அது தொடர்பாக நாம் நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளோம்.

எமது தமிழ்மக்கள் 'மண்வெட்டி பிடி' வெட்டியதற்காக கைதுசெய்யப்பட்டு வழக்குத் தொடரப்படுகின்ற நிலை காணப்படுகின்றது.

ஆனால், இவ்வாறு பாரிய அளவில் அடர்வனங்கள் அழிக்கப்பட்டமைக்கு இதுவரை நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இது குறித்து வனவளத் திணைக்களத்திடமும், மகாவலி அதிகார சபையிடமும் நேரடியாகச் சென்று கேள்வி எழுப்பியிருந்தேன்.

இதன் போது காணி வழங்குவதற்கு பெயர்ப் பட்டியலொன்றைத் தருமாறு மகாவலி அதிகாரசபையினரால் என்னிடம் கோரப்பட்டிருந்தது. இவர்கள் யாருடைய காணிகளை யாருக்குத் தரப்போகிறார்கள்? எமது தமிழ் மக்களின் பூர்வீக விவசாயக் காணிகளை அடாவடித்தனமாக ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு, எமது மக்களுக்கு காணி வழங்குவதற்காக இவர்கள் எம்மிடமே பெயர்பட்டியலைக் கோருகின்றனர்.

இவ்வாறு சட்டவிரோத அடர் வனங்கள் அழிக்கப்பட்டமைக்கு வனவளத் திணைக்களம் மற்றும் மகாவலி அதிகாரசபை மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

ஊழலை ஒழிப்போம் என்ற வகையில் இந்த அரசு செயற்பட்டுவருகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் ஊழல் இல்லையா?

இவ்வாறாக அடர்வனங்கள் அழிக்கப்பட்ட மரங்கள் எங்கு கொண்டு செல்லப்பட்டன? அதன்மூலம் பெறப்பட்ட வருமானங்கள் எங்கே?

வவுனியா வடக்கை முற்றாக ஆக்கிரமித்து "சிட்டிசன்" திரைப்படத்தில் ஓர் ஊரையே காணாமல் ஆக்கியது போல வவுனியா வடக்கை காணாமல் ஆக்குகின்ற நிலைமையை உருவாக்குகின்றீர்கள். இதனை எம்மால் ஒரு போதும் அனுமதிக்கமுடியாது.

எனவே தயவுசெய்து பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவும், ஆளுநரும் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

இது தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை எனில் இன்னும் ஒரு மா. காலத்திற்குள் ஆயிரக்கணக்கில் மக்களைத் திரட்டி வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக பாரிய அளவான போராட்டமொன்றை மேற்கொள்ளவேண்டியிருக்கும் – என்றார்.

இந்நிலையில் இதன்போது பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க பதிலளிக்கையில் –

இவ்வாறு அடர்வனம் அழிக்கப்பட்ட பகுதி "கிவுல் ஓயா" நீர்ப்பாசனத் திட்டத்தில் நீரில் மூழ்கப்போகும் பகுதியாகும்.

அங்கு பாரிய அளவில் மரங்கள் வெட்டப்பட்டுள்ளது. அவ்வாறு மரங்கள் வெட்டப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் மரக்கூட்டுத் தாபனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

இந்த மரங்கள் வெட்டுகின்ற பகுதி பாரிய வனாந்தரப் பகுதி என்பதால், அங்கு சட்டவிரோதமாக மரங்களை வெட்டுபவர்களைப் பிடிப்பதில் சிரமங்கள் காணப்படுகின்றன. அவர்கள் ஒழிந்து கொள்கின்ற சந்தர்ப்பங்களே அதிகம் காணப்படுகின்றன.

இந்த வருடத்தின் இறுதியில் அல்லது அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் கொழும்பில் இருந்து வனவளத் திணைக்கள அதிகாரிகளை அழைக்கின்றமையுடன், ஆளுநர், மாகாண, மாவட்ட மட்ட உத்தியோகத்தர்களையும் அழைத்து நாம் இதுதொடர்பான முடிவுகளை எடுப்போம்.

தற்போது மழைக்காலமாக இருக்கின்றது. இருப்பினும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர், உத்தியோகத்தர்கள் அடங்கலான குழுவாக நாம் அனைவரும் ஒருதடவை குறித்த திரிவச்சகுளம் பகுதிக்கு நேரடியாகச் சென்று அங்குள்ள நிலமைகளைப் பார்வையிடுவோம்.

அந்தவகையிலே காலையிலே இந்த களவிஜயத்தை முடித்துக்கொண்டு, மாலையில் மகாவலி அதிகாரசபை இருக்கின்ற அலுவலகத்திலே கலந்துரையாடலை மேற்கொண்டு இதுதொடர்பிலான முடிவுகளை எடுப்போம்.

தற்போது சக நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆயிரம் பேரைத் திரட்டி ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவித்தார்.

**தொடர்ச்சி▼**

# திரிவைச்சகுளம், கிவுல் ஓயா நில அபகரிப்பு; ஒரு மாத காலத்திற்குள் தீர்வு காணப்படுமாம்!

தொடர்ச்சி▲

இவ்வாறு ஆர்ப்பாட்டங்கள் இடம் பெறுவதையே தெற்கிலுள்ள இனவாதிகள் எதிர்பார்க்கின்றனர். அதனை தமக்கு சாதகமான சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்வதற்காகவே எதிர்பார்க்கின்றனர்.

எனவே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடாமல் நீங்களும், நாங்களும், ஆளுநர், மகாவலி அதிகாரசபை, வனவளத் திணைக்களமுமாக இந்த விடயங்களை நேரடியாக அவதானித்து இதுதொடர்பில் முடிவுகளை எட்டுவோம் – என்றார்.

வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் இதுதொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும், வனவளத் திணைக்களத்தினால் மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தியிருந்தோம். அதன்பிற்பாடு நாடாளுமன்றில் ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது.

மாவட்ட மட்டத்தில் குழுக்கள் அமைக்கப்பட்டு, அந்தக. குழுக்களின் ஊடாக வனவளத் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் இனங்காணப்பட்டு விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென அந்தஜ் கலந்துரையாடலின் பின்னர் எமக்கு அறிவித்தல் தரப்பட்டது.

எனவே மாவட்ட மட்டங்களில் அந்தக் குழுக்களை விரைவாக அமைத்தால் சிறப்பாக இருக்குமென வடமாகாண ஆளுநர் இதன்போது ஆலோசனை வழங்கினார்.

மேலும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் –

கிவுல் ஓயா என்பது 6,000 ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கியதாக 3,000 பேருக்கு பகிர்ந்தளிக்கின்ற ஒரு நீர்ப்பாசனத் திட்டமாகும். தமிழர்களின் பூர்வீக மணலாற்றில் அத்துமீறி குடியேற்றப்பட்டுள்ள பெரும்பான்மை இனத்தவர்களே இந்தத் திட்டத்தில் பயன்பெறவுள்ளனர். இவ்வாறாக மகாவலி அதிகாரசபையின் அடாவடித்தனங்கள் இடம்பெறுகின்றன.

ஏற்கனவே மகாவலி அதிகாரசபை கொக்குத்தொடுவாயில் 25ஏக்கர் காணிகள் வீதம் 30பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதில் முன்னாள் அமைச்சர் நிமால் சிறீபால டீ சில்வாவின் தங்கைக்கும் வழங்கப்பட்டுள்ளது.

மகாவலி அதிகாரசபை தமிழ் மக்களின் பூர்வீக காணிகளை ஆக்கிரமித்தே இவ்வாறு பெரும்பான்மை இனத்தவர்களுக்குப் பகிர்ந்தளித்துள்ளது. இந்நிலையில் தமது பூர்வீக நிலங்களை இழந்த தமிழ் மக்கள் வாழ்வாதாரத்திற்கு வழியின்றித் தவிக்கின்றனர்.

மகாவலி அதிகாரசபை இவ்வாறு தமிழ் மக்களின் பூர்வீக காணிகளை ஆக்கிரமித்து பெரும்பான்மை இனத்தவர்களுக்கு வழங்கினால் தமிழ் மக்கள் எங்கு போவது?

எமது தமிழ் மக்களை கடலில் தள்ளிவிடப்போகின்றீர்களா? இவ்வாறான செயற்பாடுகளை ஒருபோது அனுமதிக்கமுடியாது. எனவேதான் திரிவச்சகுளம் பகுதியில் சட்டவிரோதமாக காடழிப்பில் ஈடுபட்டவர்களை ஒருமுறை நேரடியாகச் சென்று துரத்தினேன். மகாவலி அதிகாரசபையின் இத்தகைய செயற்பாடுகள் தடுக்கப்படவேண்டும்.

பிரதி அமைச்சர் கூறியதற்கமைய குறித்த இடத்திற்கு நேரடியாக்கள விஜயம் மேற்கொள்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். ஆளுநர் கூறியதைப் போல மாவட்ட மட்டத்திலான குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்பதையும் ஏற்றுக்கொள்கின்றோம்.

தங்களுடைய அரசின் ஆட்சியில் இவ்வாறான ஊழல்கள் தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

மகாவலி அதிகாரசபைக்குட்பட்டிருக்கும் திரிவைச்சகுளம் பகுதியில், பெரும்பான்மை இனத்தவர்கள் அந்தர்வெவ எனும் கமக்கார அமைப்பை பதிவு செய்வதற்கு கிராம அலுவலர் ஒருவரும், வவுனியா வடக்கு பிரதேசசெயலரும் சட்டவிரோதமான முறையில் அனுமதி வழங்கியிருக்கின்றனர்.

எமது மக்களுடைய நிலங்கள் அபகரிக்கப்படுகின்றபோது, அதனை எதிர்ப்பதற்காக ஜனநாயக ரீதியாக நாம் ஆர்ப்பட்டத்தினையே மேற்கொள்ளமுடியும்.

எனவே ஆயிரம் பேர்வரையில் மக்களைத் திரட்டி, வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தினை முற்றுகையிட்டு நாம் ஆரப்பாட்டத்தை மேற்கொள்வோம். எம்மை கைதுசெய்வதெனில் அதைச் செய்யுங்கள். நாம் அதற்கு அஞ்சப் போவதில்லை.

தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமித்து, இவ்வாறு பெரும்பான்மை இனத்தவர்களைத் தொடர்ந்து குடியேற்றங்களை மேற்கொள்ளவேண்டாம். தொடர்ந்தும் இவ்வாறு செயற்படுவீர்கள் எனில், எம் மீது துப்பாக்கிச் சூடு நடாத்தினாலும், எவ்வித அடக்குமுறைகளைக் கையாண்டு எம்மை அடக்கினாலும், எம்மால் இயலக்கூடிய அளவில் எதிரப்புக்களை வெளியிடுவோம் – என்றார்

இதன்போது இடையிட்டு கருத்துத் தெரிவித்த பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இன்னும் ஒருமாதகால அவகாசத்தைத் தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனைக் கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.










# அகில இலங்கை கம்பன் கழகத்தின் உதவிகள் மாவடி வேம்புப் பிரதேச மக்களுக்கு வழங்கல்

## சாணக்கியன் எம்.பி. ஊடாக நடவடிக்கை

அண்மைக் கால வெள்ளப் பேரிடரினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டம் மாவடி வேம்பு பிரதேச மக்களுக்கு அகில இலங்கை கம்பன் கழகத்தினால் வழங்கப்பட்ட சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர் சாணக்கியன் ஊடாக மாவடி விக்னேஸ்வரா வித்யாலயத்தில் தங்கி உள்ள 100 குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

அது தொடர்பான படங்கள் இந்தச் செய்தியில் இடம் பெற்றுள்ளன.











# மோசடி நபருக்கு விளக்கமறியல்

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சியில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் இருக்கும் காணியைப் பெற்றுத் தருவார் எனக் கூறி 4 கோடியே 54 லட்சம் மோசடி செய்தவரை விளக்க மறியலில் வைக்க கிளிநொச்சி நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

2023 ஆம் ஆண்டில் 4 கோடியே 54 லட்சம் ரூபா பணத்தைப் பெற்று காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிகளைப் பெற்றுத் தருவார் என மோசடி செய்த அரசியல்வாதி ஒருவருக்கு எதிராக கடந்த ஜுன் மாதம் கிளிநொச்சி நிதி மோசடிப் பிரிவில் முறையிடப்பட்டது. இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வந்த பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

திருகோணமலையில் அரசியல் கட்சி ஒன்றின் மூதூர்ப் பிரதேச அமைப்பாளராகப் பதவி வகிக்கும் சந்தேக நபரே இந்த மோசடியில் ஈடுபட்டார் எனக் குற்றம் சாட்டப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை நேற்று முன் தினம் கிளிநொச்சி நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது சந்தேக நபரை எதிர் வரும் 23 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.



# முள்ளியவளை - நெடுங்கேணி வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் கவனத்திற்கு!

## அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவு அறிவிப்பு

**(சண்முகம் தவசீலன்)**

முள்ளியவளை - நெடுங்கேணி வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் கவனத்திற்கு என முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவு அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் கோடாலிக் கல்லு குளத்தின் அணைபகுதி ஏற்கனவே உடைந்துள்ளதால், தற்போது (நேற்றிரவு 9.30 மணியளவில்) பெய்துவரும் தொடர்ச்சியான கடும் மழையினால் அப்பகுதியில் பெருமளவு நீரோட்டம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கோடாலிக்கல்லு முன்புறத்தில் உள்ள முள்ளியவளை - நெடுங்கேணி வீதி நீரில் மூழ்கியுள்ளது.

எனவே, இந்த வீதியைப் பயன்படுத்தும் பயணிகள் முக்கியமாக இரவு நேரங்களில் பயணிப்பதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அவசரத் தேவைகள் இருப்பின், முள்ளியவளை - ஒட்டிசுட்டான் - நெடுங்கேணி வீதியை பயன்படுத்தவும். - என்று அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தண்ணிமுறிப்புக் குளத்தின் கீழ்பகுதி விவசாயிகளுக்கும் அவசர அறிவிப்பு!

**(சண்முகம் தவசீலன்)**

தண்ணிமுறிப்பு குளத்தின் நீர் மட்டம் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதனால், தற்போதைய (நேற்றிரவு 9 மணிக்கு) மழை நிலையை கருத்தில் கொண்டு வான் கதவுகளை திறக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவு நேற்றிரவு அறிவித்தது.

தண்ணிமுறிப்பு குளத்தின் கீழ்பகுதியில் வயல்களில் உள்ள அனைத்து விவசாயிகளும் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்து செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இது மிக அவசரமான அறிவிப்பு. தயவுசெய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவும். - என்று முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவு நேற்றிரவு வெளியிட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வவுனியாவில் கடும் மழையால் மீண்டும் வெள்ளப் பீதி
## பண்டாரவன்னி கிராம மக்களுக்கு அவசர அறிவிப்பு

**(சண்முகம் தவசீலன்)**

வவுனியா வடக்கு பகுதியில் நேற்று மிக அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. நேற்றிரவு தொடர்ந்து மேலும் பலத்த மழை பெய்யும் வாய்ப்பு இருந்தமையால், குருவிச்சை ஆற்றுப் பகுதிகளில் வெள்ளம் உருவாகும் அபாயம் நிலவியதாகக் கூறப்பட்டது.

எனவே முல்லைத்தீவு பண்டாரவன்னிப் பகுதியில் வசிக்கும் மக்கள் நிலைமையை கவனமாகக் கண்காணிக்க வேண்டும்.

வெள்ளம் அபாய மட்டத்திற்கு உயர்ந்தால், தயவுசெய்து உடனடியாக கருவேலன்கண்டல் பாடசாலைக்கு பாதுகாப்பாக இடம்பெயருங்கள் என்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவு நேற்று மாலை அறிவித்துள்ளது.

# பீடி இலைகள், இரசாயனப் பொட்டலங்கள் வென்னப்புவவில் பொலிஸார் கைப்பற்றினர்



**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

கடல் வழியாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்டு வேறு இடத்திற்கு கொண்டு செல்லப்படத் தயாராக இருந்த ஒரு தொகை பீடி இலைகள் மற்றும் இரசாயனங்கள் அடங்கிய பொட்டலங்களை வென்னப்புவ பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

வென்னப்புவ, வைக்கால பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இந்த சோதனை இடம்பெற்றுள்ளது.

வென்னப்புவ – அளுத்தோட்டை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சோதனை நடவடிக்கையின் போது 17 பொலிதீன் பைகளில் அடைக்கப்பட்டிருந்த 395 கிலோகிராம் பீடி இலைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. அதற்குள்ளே இரகசியமாக 20 பொலிதீன் பைகளில் அடையாளம் தெரியாத இரசாயனப் பொருள் எனச் சந்தேகிக்கப்படும் 60,000 சிறிய பொட்டலங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

பீடி இலைகள் மற்றும் இரசாயனங்கள் அடங்கிய பொலிதீன் பைகள், 04 சிறிய மீன்பிடி படகுகளில் கொண்டு வரப்பட்டு தன்னிடம் ஒப்படைக்கப்பட்டன எனப்பொலிஸாரிடம் தெரிவித்துள்ள சந்தேக நபர், அந்த பீடி இலைகளை எடுத்துச் செல்லும் வரை மட்டுமே தாம் பாதுகாத்து வந்தார் எனவும் தெரிவித்துள்ளார்.

புலனாய்வுப் பிரிவின் வென்னப்புவ பிரிவு வழங்கிய தகவலின் அடிப்படையில் இந்த சோதனை நடத்தப்பட்டது.

பொலிஸாரால் பறிமுதல் செய்த பீடி இலைகள் கட்டுநாயக்க சுங்க அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் -10.12.2025




இன்று வளர்ச்சி காணப்படும். உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கை மூலம் இலக்கில் வெற்றி பெறுவீர்கள். ஸ்திரமான முடிவுகள் வெற்றிக்கு வழி வகுக்கும்.

பணியிடத்தில் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. உங்களின் நேர்மையான முயற்சி உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும்.

நீங்கள் இருவரும் நல்ல தொடர்புடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். வெளியிடங்களுக்கு சென்று ஒன்றாக இணைந்து மகிழ்ச்சியாக நேரத்தை செலவு செய்வீர்கள்.

உங்களின் கடின உழைப்பிற்காக ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் இன்று கூடுதல் பண வரவு காணப்படும்.

இன்று ஆற்றல் நிறைந்து காணப்படுவீர்கள். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அபாரமான நாள். உங்கள் இனிமையான வார்த்தை உங்கள் நெருங்கிய உறவுகளை மகிழ்ச்சி யுறச் செய்யும். உங்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் அபாரமாக இருக்கும். சக பணியாளர்களுக்கு நீங்கள் உதாரணமாக இருப்பீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையை வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் அவருக்கு மகிழ்ச்சி உண்டாகும். நீங்கள் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இருவரும் சிறந்த ஜோடியாகத் திகழ்வீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக இருக்கும். நிதிநிலை சுதந்திரமாக் இருக்கும். உங்களின் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

நீங்கள் தேக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். இது உங்கள் மகிழ்ச்சியைக் குறைக்கும். உங்கள் வளர்ச்சியில் தாமதங்கள் காணப்படும். விரைந்து முடிவெடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளை மேற்கொள்ளும் போது திட்டமிட வேண்டும். பணிச்சுமை அதிகமாக காணப்படும். வெற்றி பெறுவதற்கு திறமையாக கையாள வேண்டும்.

உங்களின் மாறுபடும் மனநிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். எனவே சமநிலையோடு இருந்து உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். சேமிப்பதில் கட்டுப்பாடு காணப்படும். இந்தச் சூழ்நிலைகளை விவேகத்துடன் கையாளக் கற்றுக் கொள்ளுங்கள்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். தக்க நேரத்தில் உணவு உட்கொள்ள வேண்டும்.




இன்று வெற்றி பெறுவதற்கு திட்டமிட வேண்டியது அவசியம். எளிதில் வெற்றி காண்பதை கடினமாக உணரவீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிச்சுமை உங்களுக்கு கவலையை அளிக்கும். பாதுகாப்பின்மை உணர்வு நிறைந்து காணப்படும். இதனால் பணிகளை திறமையாக செயல்படுத்த இயலாது.

உங்கள் உறவில் திருப்திகரமான நிலை இருக்காது. உங்கள் அகந்தைப் போக்கை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

நிதிநிலை திருப்திகரமாக இருக்காது. உங்களின் நெருங்கிய நபர் ஒருவருடைய உடல் நலத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். அதனை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்.




இன்று உணர்ச்சிவசப்பட நேரலாம். இதனால் தன்னம்பிக்கை இழக்க நேரிடும். இதயம் கனப்பதாக உணர்வீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் செய்ய இயலாது. இதனால் கவலை ஏற்படும். சக பணியாளர்களுடனான உறவு முறை சிறப்பாக இருக்காது.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

தேவையற்ற செலவுகள் ஏற்பட்டு பணம் கரையும். இன்று பணத்தை சேமிக்க இயலாது.

தொண்டை சம்பந்தமான பிரச்சினை மற்றும் தலை வலி காணப்படுகின்றது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் அக்கம்பக்கத்தினர்கள் ஆதரவாக இருப்பார்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். முக்கிய முடிவுகள் இன்று நல்ல பலனளிக்கும்.

உங்கள் செயல் திறனுக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்களின் அபாரமான திறமையைக் கண்டு சக பணியாளர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணத்தை சேமிப்பதற்கான சிறந்த வாய்ப்புகள் உள்ளன. பங்கு போன்ற இதர வகைகள் மூலமாகவும் பணம் வரும் வாய்ப்பு உள்ளது.

கடவுள் அருளால் இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். வலிமையுடன் இருப்பீர்கள்.




முக்கிய விடயங்களை இன்று தொடங்குவதற்கு உகந்த நாள் அல்ல. இன்று அமைதியின்மையும் பாதுகாப்பின்மை உணர்வும் காணப்படும். பிறருடன் பேசும் போது கவனம் சேவை. பிரார்த்தனை மூலம் அமைதி பெறலாம்.

இன்று பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. திறமையாக பணியாற்ற திட்டமிட வேண்டியது அவசியம்.

இன்று நன்மை காண பொறுமை அவசியம். இன்று உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் பேண இந்த உணர்வை தவிர்க்க வேண்டும்.

பொறுப்புகள் அதிகமாக காணப்படும். குடும்பச் செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சிறய அளவில் கடன் வாங்குவீர்கள்.




இன்று திருப்தி குறைந்து காணப்படும். கவனமாக திட்டமிட்டால் வெற்றி பெறலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

பணியிடச் சூழல் கடினமாக இருக்கும். குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. தாமதங்களை தவிர்க்க முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் சண்டையிடுவீர்கள். உங்கள் மனதை மாற்றிக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும். இதனால் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்க முடியும்.

அஜாக்கிரதை மற்றும் கவனமின்மை காரணமாக பண இழப்பு நேரலாம்.இன்று பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலி ஏற்படலாம். தகுந்த மருத்துவ சிகிச்சை ஆறுதல் தரும்.

# இன்றைய ராசி பலன்கள் -10.12.2025




இன்று மந்த நிலையும் பாதுகாப்பின்மை உணர்வும் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு திருப்தியை அளிக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பணிகளை ஒப்படைக்கும் முன்பு சரிபார்த்து தருவது சிறந்தது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். என்றாலும் அகந்தை உணர்வு தலை தூக்கும். அதனை தவிர்த்து இருவரும் மனம் திறந்து பேச வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. அதிகரிக்கும் செலவுகளை சமாளிப்பது கடினமாக உணர்வீர்கள். இன்று அதிகமாக சேமிக்கவும் இயலாது.

இன்று ஆரோக்கியம் ஸ்திரமாக இருக்கும். உங்கள் தந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று எதிர்பாராத நன்மைகள் நடக்கும். உங்கள் சமயோசித புத்தி மூலம் வெற்றி காண்பீர்கள்.

உங்கள் செயல்திறன் திறமையை மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். நீங்கள் விரைந்து பணிகளை முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வோடு நடந்து கொள்வீர்கள். இது உறவை இன்னும் பலப்படுத்தும்.

இன்று பணவரவு அதிகமாக இருக்கும். காப்பீடு அல்லது பூர்வீக சொத்து வகையில் பண வரவு காணப்படும்.

உங்களின் திருப்தியான மன நிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். முன்னேற்றம் தாமதமாக ஏற்படும். இதனால் கவலை ஏற்படும். பயணங்கள் ஆறுதல் அளிக்கும்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. பணிகளில் தவறுகள் நேரலாம். உங்கள் செயல்திறனைக் கண்டு மேலதிகாரிகள் அதிருப்தி அடைவார்கள்.

இன்று இருவரிடையே மகிழ்ச்சி காணப்படாது. மந்தமான மனநிலை காரணமாக இருவரும் மகிழ்ச்சியாக இருக்கும் நிலை காணப்படாது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

தோல் அரிப்பு ஏற்படாமல் இருக்க ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எண்ணெய் பதார்த்தங்களை தவிர்ப்பது நல்லது..




இன்று உங்கள் விருப்பங்கள் மற்றும் இலக்குகளில் வெற்றி பெறுவதற்கு உகந்த நாள். புதிய தொடர்புகளை இன்று நீங்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது கவனமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெற இயலும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் நம்பிக்கையோடு வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கமும் பிணைப்பும் அதிகரிக்கும்.

நிதிநிலைமை இன்று பிரகாசமாக இருக்கும். பணத்தை ஆக்க பூர்வமான விடயங்களுக்குச் செலவு செய்வீர்கள்.

உங்களின் உறுதியான மன நிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர், அதிபர்களுக்கு உடனடி சலுகைகளை வழங்க ஆசிரியர் சங்கம் கோரிக்கை




அண்மையில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு உடனடி சலுகை நிவாரணத் திட்டத்தை அமுல்படுத்துமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் நேற்று இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், பல கல்வியலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் நிலுவையில் உள்ள கடன்கள் உள்ளிட்ட நிதிச் சுமைகளுடன் போராடி வருகின்றனர் என்றும் கூறினார்.

பாதிக்கப்பட்ட கல்வியலாளர்களுக்கு அரசாங்கம் நிதி நிவாரணம் வழங்க வேண்டும். இதில், பாதிக்கப்பட்டவர்களுக்கு கடன் சலுகைகள் அல்லது கடன்களை இரத்து செய்தல் ஆகியவை உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரினார்.

மேலும், தற்போது செயற்பாட்டில் உள்ள சுரக்ஷா காப்புறுதித் திட்டம் மாணவர்களுக்கு ஆதரவளிக்கப் பயன்படுத்தப்படலாம்.

இருப்பினும், இந்ததிட்டத்தில் கிடைக்கும் நன்மைகள் குறித்த விபரங்கள் தெளிவாக இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.